www.eelamview.com

# விடுதலைப்புலிகள்

குரல்: 83 வைகாசி [illegible] அன்பளிப்பு 5/-

அரசியல்துறை

உள்ளே
★ தலைவரின் விசேட செய்தியும் வன்னிக்களத்தின் இராணுவயதார்த்தமும்
★ ஜயசிக்குறுய் நடவடிக்கையும் புலிகளின் எதிர்ச்சமரும்
★ இது எத்தனையாவது அதிசயம்?
★ ஜயசிக்குறுய் ஓராண்டு நிறைவுகுறித்து தேசியத் தலைவரின் சிறப்புச்செய்தி
★ உலகக்களம்
★ ஜயசிக்குறுய் படையினர்க்கு ஒரு மடல்
★ மண் சுமக்கும் ஊழியம்

## இரண்டாம் ஆண்டில் ஜயசிக்குறுய்

சிங்களத் தளகர்த்தர் ரத்வத்தையின் புகழ்பெற்ற காலக்கெடுக்களையும் தாண்டி 'ஜயசிக்குறுய்' படைநடவடிக்கை இரண்டாம் ஆண்டினுள் அடியெடுத்து வைத்துள்ளது.

முடிந்துபோன முதலாண்டுச்சமரில் 3000ற்கும் அதிகமான சிங்களப்படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 7090ற்கும் மேற்பட்டோர் உடற்சேதமடைந்துள்ளனர். இந்த ஒரு வருடச் சண்டைகளில் சிங்களப்படைகள் இழந்துள்ள ஆயுதங்களினதும் - இராணுவத்தளபாடங்களினதும் பணப்பெறுமதி சுமார் 600 கோடி ரூபாய்களாகும்.

இந்த இராணுவ நடவடிக்கையின் காலநீட்சி, சிங்களத்தின் இராணுவ - அரசியல் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. இந்த ஓராண்டுச் சமரின் விளைவுகளால் சிங்களத்தின் படைப்பெருமை பாழடைந்துள்ளது. எந்த ஒரு தளபதியும் தேசிய வீரர்களாக சிறிலங்காவில் கணிக்கப்படவில்லை - கௌரவப்படுத்தப்படவில்லை. ஜயசிக்குறுய் சண்டைகளுக்கு தலைமை கொடுக்கும் அனைத்து சிங்களத்தளபதிகளும் ஏளனத்திற்கும் - கண்டனத்திற்கும் உள்ளாகின்றனர். இடமாற்றங்கள் - பதவிமாற்றங்கள் மூலம் சிங்கள அரசே அவர்களைத் தண்டிக்கிறது.

ஓராண்டுச் சண்டைகள் மூலம் 65 கி.மீ. நீளமான தரைப்பாதையில் 35 கி.மீ. தூரத்தை மட்டுமே படையினரால் கையகப்படுத்த முடிந்துள்ளது. இதில் படைத்தரப்பு சந்தித்த இழப்பு-அளவுக்குமீறிய விலைகொடுப்பு என அரசு கண்டனத்திற்குள்ளாகியுள்ளது. முழுப்பலத்தையும் திரட்டி - செலவழித்த இலக்கை அடைந்தாலும் இது தோல்வியடைந்த ஒரு இராணுவநடவடிக்கை எனவும் ஆய்வாளர்கள் மதிப்பிடுகின்றனர்.

எவ்வாறும், பாதையைக் கைப்பற்றிவிடவேண்டும் என்பதில் படைத்தலைமை விடாப்பிடியாகவுள்ளது. இரண்டாம் ஆண்டில் புதிய தந்திரோபாயங்களுடன் - பலத்தையும் அதிகரித்து நகர்வுகளை மேற்கொள்ள அது எத்தனிக்கின்றது. இந்த நோக்கத்துடன் கிளிநொச்சியிலும் - மாங்குளம் பகுதியிலும் சிங்கள அரசு படைக்குவிப்பைச் செய்துள்ளது. 20.05.1998 அன்று கரடிப்போக்கு முனையிலிருந்து ஒரு நகர்வை மேற்கொள்ள முயற்சித்து அடிவாங்கி-பின்வாங்கியிருந்தது.

இந்த ஆண்டின் இறுதிப்பகுதியில் ஆரம்பமாகவிருக்கும் பருவ மழைக்கு முன்னர் படைநடவடிக்கையை வெற்றியுடன் முடிக்கவேண்டும் என வெளிப்படுத்தப்படாத காலக்கெடுவை சிங்களப்படைத் தலைமை விதித்துள்ளதாக கொழும்புச்செய்திகள் கூறுகின்றன. தொடங்கவிருக்கும் புதிய சண்டைகளின் விளைவுகளை எதிர்பார்த்து - சிங்கள அரசு நடாத்தவிருக்கும் - மாகாணசபைத் தேர்தல்களும் உள்ளது.

(14ஆம் பக்கம் பார்க்க)


## உங்களது அன்பிற்கு எங்களது நன்றிகள்

ஜயசிக்குறுய்க்கு எதிரான ஓராண்டுச் சமரின் பூர்த்தியை முன்னிட்டு அன்பிற்கினிய எமது மக்கள் வாழ்த்துக்களையும் - பாராட்டுக்களையும் அனுப்பி வைத்துள்ளனர். நேரடியாக வந்து எம்மிடம் கையளித்தவர்களும் உண்டு.

எமது மக்களின் மடல்களைக்கண்டு நாங்கள் அடைந்த மகிழ்ச்சிக்கும் - உற்சாகத்திற்கும் எல்லை இல்லை. எம்மிடம் வந்துசேர்ந்த ஆயிரக்கணக்கான மடல்களுக்கு தனித்தனியாக நன்றிகூறி பதில்மடல் வரைய முடியாதுள்ளதால் இந்தப் பொது அறிவிப்பை தனி மடலாகக் கருதும்படி எமது மக்களிடம் அன்புக் கோரிக்கை விடுக்கின்றோம், நன்றி.

இப்படிக்கு
போராளிகள்

## ஜயசிக்குறுய் இலக்கு



தமிழர்சேனையின் பீரங்கிப்படையணி: 'ஜயசிக்குறுய்' முறியடிப்புச்சமரின் முதுகெலும்பு!

## தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

www.eelamview.com

# தலைவரின் விசேட செய்தியும் வன்னிக்களத்தின் இராணுவயதார்த்தமும்

புலிகளின் குரல்

'ஜெயசிக்குறுய்' சமரின் ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் வெளியிட்டுள்ள சிறப்புச் செய்தி, சமரின் இராணுவ – அரசியல் நோக்கங்களை வெளிப்படுத்துவதுடன் - இந்த ஒரு வருடச் சமரில புலிப்படை சாதித்துள்ள இராணுவ சாதனைகளையும் விளக்கியுள்ளது.

ராங்குகள் -பீரங்கிகள் -கனரக ஆயுதங்களுடன் படையெடுத்துள்ள முப்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட சிங்களக் காலாட்படையினரை எதிர்த்து - கடந்த ஒருவருடகாலமாக, புலிவீரர்கள் காட்டிவரும் போர்த்திறனை - தலைவர்–பெருமை பொங்க எடுத்துக்கூறியுள்ளார்.

ஆட்பலத்தில் மட்டுமல்ல, ஆயுதபலத்திலும் இருபகுதிப் படைகளுக்கும் இடையே இருக்கின்ற சமச்சீரின்மையை வெளிப்படையாகவே சுட்டிக்காட்டிய தலைவர் அவர்கள், இந்த சமச்சீரற்ற நிலையிலும் புலிவீரர் புலப்படுத்தும் போர்த்திறனைப் புகழ்ந்து பாராட்டியுள்ளார்.

இதேவேளை, சிங்கள அரசின் பொருண்மியத் தடைகளினால் ஏற்பட்டுள்ள வாழ்வியல் இடர்களுக்கு மத்தியிலும், களத்தில் நிற்கும் போராளிகளுக்கு உணவூட்டுவதில் உதவும் எமது மக்களது பணிக்கு உளப்பூர்வமாக நன்றி தெரிவித்துள்ளார். அத்துடன், சண்டைப் பணிகளுக்கென களப்பகுதியில் பதுங்ககழிகளை வெட்டிக் கொடுத்து – உதவும் எமது மக்களது துணிச்சலான போராட்டப்பங்களிப்பையும், தலைவர் வியந்து போற்றியுள்ளார்.

தனித்த ஒரு இலக்கைக்கொண்ட சமரகவே, 'ஜயசிக்குறுய்' நடவடிக்கையைக் காட்ட சிங்களம் விரும்புகின்றது. "மக்களது பிரயாணப்பாதை திறப்பிற்காக" என்று பாசாங்கு செய்து- சிவிலியன் நன்மைக்கான ஒரு இராணுவ நடவடிக்கை போன்று உலகிற்குக் காட்ட சிங்கள அரசு முனைகின்றது. ஆனால், இராணுவ ரீதியில் பல்வேறு இலக்குகளையுடைய 'ஜயசிக்குறுய்' நடவடிக்கை, நாசகார அரசியல் நோக்கங்களையும் கொண்டிருக்கின்றது. இந்த உண்மைகளை தனது செய்தியில்– தலைவர் விளக்கிக்கூறியுள்ளார்.

தமிழர்தாயக சிதைப்பும் – புலி அழிப்பும் - நில ஆக்கிரமிப்பும் — என்று பல இராணுவநோக்கங்களை வைத்திருக்கும் அதேவேளை, 'ஜயசிக்குறுய்' சமர் வெற்றியுடன் தமிழீழ விடுதலைப் போராட்டம் புதைகுழிக்குள் வைக்கப்பட்டு – தீவு முழுவதும் சிங்களத்தின் ஆதிக்கத்துக்குள் வந்துவிடும் என்றும், சிங்கள அரசு நம்புகின்றது. இதனால், 'ஜயசிக்குறுய்' சமர் சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் மிக விருப்பிற்குரிய சமராக விளங்குகின்றது.

பேரினவாதத்தின் பண்பாட்டுச்சின்னமான தலதாமாளிகை முன்றலில் குண்டு வெடித்து இனவாதிகளை கோபமூட்டிய போதும், அதன் பாதுகாப்பின்மைக்குப் பொறுப்பேற்கவேண்டிய ரத்வத்தவை பேரினவாதிகள் மன்னித்தனர். ஏனெனில் பேரினவாத நலன்களுக்கு ஒட்டுமொத்தமாக முடிசூட்டப்போகின்ற 'ஜயசிக்குறுய்' சமரின் சாரதியாக ரத்வத்த விளங்குவதேயாகும்.

இந்தவகையில் சமரின் இராணுவ - அரசியல் நோக்கங்களை தெளிவாக இனங்கண்ட தலைவர் அவர்கள், 'ஜயசிக்குறுய்' நடவடிக்கையை "சமர்களுக்கெல்லாம் தாய்ச்சமர்" என்று சரியாக வர்ணித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற பெரும் படையொன்றை சிங்கள அரசு ஏவிவிட்ட போது – அதன் தொடர்ச்சியாக பல படையெடுப்புகளை சிங்களம் நிகழ்த்தப்போகின்றதென்பதை, தலைவர் தீர்க்கதரிசனமாக கணித்துவைத்திருந்தார். எனவேதான் யாழ்ப்பாணச் சமரில்- தலைவர் அவசரம் காட்டவில்லை. வாய்ப்பான இடத்தில், வாய்ப்பான நேரத்தில் ஒரு சமரை எதிர்கொள்ள விரும்பி யாழ்ப்பாணப் படையெடுப்பிற்கு எதிரான சமரை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடாத்தினார். கிளிநொச்சி படையெடுப்பையும் அதேபோன்று எதிர்கொள்ளப் பணித்தார். அதேநேரம், 'எடிபலவை' எதிர்கொள்வதையே தவிர்த்தார். இந்தவகைத் தந்திரோபாயங்களால், எதிரியை தவறானவழியில் சிந்திக்கச் செய்து - அகலக்கால்வைக்க சிங்களத்திற்கு ஆசையூட்டினார். நிலம் விழுங்கி - கொழுக்கும் எதிர்பார்ப்புடனும் - தமிழீழ விடுதலைப் புலிகளை அழிக்கும் நோக்குடனும் 'ஜயசிக்குறுய்' தொடங்கியது.

வன்னி நிலத்தில் ஒரு மாபெரும் மரபுச்சமரை எதிர்பார்த்து - தலைவர் - தயார்படுத்தல்களைச் செய்திருந்தார். அந்த மரபுச்சமரை எதிர்கொள்ளத்தக்கவகையில் இயக்கத்தின் படைத்துறைக் கட்டமைப்பில் தேவையான மாற்றங்களைச் செய்து – சீர்படுத்தினார். புதிய படைப்பிரிவுகளை தோற்றுவித்தார். இவற்றிற்கேற்றாற்போல் தந்திரோபாயங்களை வரைந்து - பயிற்சிகளை வழங்க ஏற்பாடுகள் செய்தார்.

'ரிவிரச', 'சத்ஜய', 'எடிபல' நடவடிக்கைகளின் விளைவால் புலிப்படை மரணப்படுக்கையில் கிடந்து போராடுகின்றது என்று சிங்களத்தலைமை கற்பனை பண்ணிக்கொண்டிருக்க – மறுபுறத்தில் – சிங்களப்படைகளின் இருப்பிற்கே அச்சுறுத்தலைக் கொடுக்கத்தக்க செயல்திட்டங்களில், தலைவர் பிரபாகரன், தனது ஆற்றலையும் - நேரத்தையும் செலவிட்டுக் கொண்டிருந்தார். பீரங்கிப்படையணியை கட்டியெழுப்பினார். விமான எதிர்ப்புப் படையணியை சீர்செய்தார். மரபுவழிச் சண்டைகளுக்காக தளபதிகளை தயார்படுத்தினார். போராளிகளுக்கு சமர்ப்பயிற்சிகளைக்கொடுத்து - நெருங்கிநின்று நடைபெறும நேரடிச்சண்டைகளுக்கு அவர்களைத் தயார்படுத்தினார். பல்வேறு போர் உத்திகளையும் - சண்டைத்தந்திரங்களையும் உபயோகித்து சமரை நெறிப்படுத்தினார்.

இந்த ஓராண்டுச்சமரில், சிங்களப் படைகளின் நகர்வை மறித்துச்சமராடும் தற்காப்புத்தாக்குதல்களையும் ( Defensive ),

நிலைகொண்ட படையினரையும் – படைக்கல களஞ்சியங்களையும் குறிவைத்து வலிந்த தாக்குதல்களையும் ( Offensive ),

திடீரென நகர்ந்து – நிலைகொண்ட படையினரை விரட்டியடிப்பதற்காக முறியடிப்புத்தாக்குதல்களையும் ( Counter offensive ) தேவைகேற்றவாறு – தலைவர் - 'ஜயசிக்குறுய்' களமுனையில் உபயோகித்து வருகின்றார்.

புளியங்குள மறிப்புத்தாக்குதல்களும் - இன்றைய மாங்குளம் மறிப்புத்தாக்குதல்களும் தற்காப்புத்தாக்குதல்களுக்கு சிறந்த உதாரணங்களாகவும்,

அதேவேளை, தாண்டிக்குளம் – ஓமந்தை - விஞ்ஞானகுளம் பகுதிகள்மீது நிகழ்ந்த பெருந்தாக்குதல்கள். வலிந்த தாக்குதல் போர்முறைக்கு நல்ல உதாரணங்களாகவும்,

இதேபோன்று, படையினர் நிலைகொள்ளமுயன்ற மன்னகுளம் – புதூர்ச் சந்திப்பகுதிகளில் நடாத்தப்பட்ட தாக்குதல்கள் முறியடிப்புத்தாக்குதல் போர்முறைக்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகவும் விளங்குகின்றன.

அத்துடன், 'ஜயசிக்குறுய்' நடவடிக்கையை பலவீனப்படுத்தும் உபாயத்துடன் 'ஜயசிக்குறுய்' களத்திற்கு வெளியே – தலைவர் பிரபாகரன் - பல தந்திரோபாயத் தாக்குதல்களையும் ( Tactical offensive ) நடாத்தியுள்ளார். கிளிநொச்சி – பரந்தன் – ஆனையிறவு தளம் மீது நடந்த பாரிய வலிந்தத்தாக்குதலை இந்தவகைப் போர்முறைக்கு சிறந்த உதாரணமாகக்கொள்ளலாம்.

இந்தப் போருத்திகளாலும் – புலிவீரர்களின் சண்டைத்திறன்களாலும், இன்று, புலிகள் இயக்கம் புதியபலம் பெற்று புத்துணர்ச்சியுடன் காணப்படுகின்றது.

புலிகளை அழித்து – போராட்டத்தை ஒடுக்கும் எதிர்பார்ப்புடன் சிங்களம் ஆரம்பித்த 'ஜயசிக்குறுய்' சமர் – இன்று– அதனுடைய படையமைப்பிற்கே பாரிய சேதத்தை உண்டுபண்ணுகின்ற சமராக மாறியுள்ளது.

"இந்த ஓராண்டு அக்கினிப்பிரவேசத்தில் நாம் எரிந்துபோகவில்லை. மாறாக, நாம் புத்துயிர்பெற்று – புதிதாக எழுந்தோம், பலமாக எழுந்தோம்" என்று இந்தப் புதிய யதார்த்தத்தை, தலைவர் மகிழ்ச்சியுடன் தமிழீழமக்களோடு பகிர்ந்து கொண்டுள்ளார்.

இதேவேளை, 'ஜயசிக்குறுய்' சமர் இப்போதைக்கு முடிந்துவிடப்போவதில்லை என்ற உண்மையையும், அவர் காரணங்களுடன் விளக்கியுள்ளார். தொடரப்போகும் இந்தச்சமரில் மேலு ஆயிரம் - ஆயிரம் சிங்கள இளைஞர்கள் பலியாகப்போகின்றனர் என்ற அபாய அறிவிப்பையும் சிங்களமக்களுக்கு விடுத்துள்ளார். அத்துடன் உட்புகுந்த படையை விரட்டியடிக்கும்வரை 'ஜயசிக்குறுய்' சமர் ஓயப்போவதில்லை என சிங்கள இராணுவவாதிகளை எச்சரித்து – புலிகளின உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழரின் விடுதலைப் போராட்டத்தை அழித்தொழிப்பதற்காக கடந்த 50 வருடகாலமாக சிங்களம் அனைத்து முயற்சிகளையும் எடுத்துவருகின்றது. இதுகாரணமாக சிங்களத்தின் பொருண்மியமும் சிதைந்துவருகின்றது. பல்லாயிரம் சிங்களவரும் அழிந்துள்ளனர். தமிழினத்தை அழிக்கும் நோக்குடன் நடாத்தப்படுகின்ற இந்தப்போரால் சிங்களதேசமே அழி... பாதையில் செல்கின்றது.

தமிழினத்தைப் பொறுத்தவகையில் இது ஒரு தற்காப்புப்போர். இந்தப்போரை வெல்வதன்மூலம்தான் தமிழினம் பாதுகாப்பாகவும் – நிம்மதியாகவும் – சுதந்திரமாகவும் வாழமுடியும். எனவே, இது வாழ்வதற்கான போர். இந்தப் போரின் தலைவிதியை தீர்மானிக்கும் அளவுக்கு 'ஜயசிக்குறுய்' சமர் முக்கியத்துவம் பெறுகின்றது. 'ஜயசிக்குறுய்'யை தோற்கடித்து – சிங்கள அரசுக்கு ஒரு பெரிய இராணுவத் தோல்வியை பரிசளிக்கவேண்டும். அதன்மூலம் தமிழரின் இனப்பிரச்சனைக்கு இராணுவத் தீர்வு தேடுவது நடைமுறைச் சாத்தியமற்றது என்ற உண்மையை சிங்களத்திற்கு புகட்டுவோம். ○



www.eelamview.com
www.eelamview.com

www.eelamview.com



# ஜயசிக்குறுய் நடவடிக்கையும் புலிகளின் எதிர்ச்சமரும்

1997 மே 13ஆம் நாள் ஜயசிக்குறுய் சமர்க்களம் இரு முனைகள் வழியே திறக்கப்பட்டது.

நொச்சிமோட்டையூடாக ஓமந்தை வரை நகர்ந்து - அங்கிருந்து முன்னேறி 65 கி. மீற்றர் நீளமான வவுனியா - கிளிநொச்சி தரைப்பாதையைத் திறப்பதை ஒரு களமுனையாகவும்,

டொலர் - கென் பண்ணைப் பகுதியூடாக முன்னேறி நெடுங்கேணியைக் கைப்பற்றி அங்கிருந்து படைநகர்த்தி வன்னி நிலத்தின் ஒரு பகுதியை விழுங்கிச் செல்வதை நோக்கமாகக் கொண்டு அடுத்த களமுனையையும் பகைவன் திறந்தான்.

இந்த இரண்டு களமுனையையும் ஒன்றிணைத்து- நகர்த்தி; புலிகளை முழுமையாக சண்டைக்குள் ஆழ்த்தி - அவர்களின் ஆட்பலத்தைக் கரைத்து - விடுதலைப்போராட்டத்தை நசுக்கும் பேராசைத்திட்டத்தையும் ஜயசிக்குறுய் வைத்திருந்தது.

ஒரு வருடத்தை பூர்த்தி செய்துவிட்ட ஜயசிக்குறுய் நடவடிக்கைப் படையினரால், இன்றுவரை, 35 கி. மீ. நீளப்பாதையை மட்டுமே கையகப்படுத்த முடிந்துள்ளது. இன்றைய நிலையில் மாங்குளத்தைக் கைப்பற்றுவதையே நடவடிக்கைத் தலைமையகம் தனது உடனடி இலட்சியமாகக் கொண்டுள்ளது.

ஜயசிக்குறுய் சமரின் ஆரம்பநாளான வைகாசி 13ஆம் நாள் பெருந்தொகையான எறிகணைகளை இரு களமுனைகளிலும் ஏவி - மரபுப் போர் முறையில் - பகைவன் போர் முரசு கொட்டினான்.


வன்னியின் நில அமைப்பும் - நடவடிக்கைத்திட்டத்தின் பிரமாண்டமும் ராங்குகளின் தேவையை படைத்தரப்பிற்கு இடித்துக்காட்டின. இதனால் சிங்களத்தின் கவசப்படை, ஜயசிக்குறுய் படை நகர்வின் முதுகெலும்பாகியது.

எனினும் சமர் தொடங்கிய மூன்றாம் நாள் பகைவனின் கவசப்படையணிக்கு புலிகள் பலத்த அடி கொடுத்தனர். ஓமந்தை சண்டைமுனையில் இரண்டு ராங்குகளை அழித்தனர்.

அன்றிலிருந்து எட்டாம் நாள் - வைகாசி 24ஆம் திகதியன்று - ஓமந்தை முனையைத்திறந்து 3 கி. மீ. தூரத்திலிருந்த இறம்பைக்குளச் சந்தியைக் கைப்பற்ற படையினர் முயற்சித்தனர்.

வயல் வெளிகளையும் - சிறு பற்றைக்காடுகளையும் கொண்ட அந்த திறந்த வெளிச் சண்டையரங்கை புலிகளின் கவச எதிர்ப்பு படையணியாகிய விக்டர் படையணி நன்கு கையாண்டது. அதிகாலையிலிருந்து மாலைவரை நடந்த அன்றைய பகல் சண்டையில் மேலும் இரண்டு ராங்குகளை புலிகள் அழித்தனர். அதேவேளை இறம்பைக்குளத்தை படையினர் கைப்பற்றினர்.

எனினும் நடவடிக்கை தொடங்கி நான்கு நாட்களில் ஓமந்தை, இறம்பைக்குளம் பகுதியைக் கைப்பற்றி - அங்கிருந்து இரண்டாங்கட்ட நகர்வைச் செயற்படுத்தலாம் என்றிருந்த



படைத்தலைமையின் திட்டம் ஈடேற இரண்டு வாரங்கள் சென்றதுடன், நான்கு ராங்குகளையும் இழந்தது. சுமார் 125 படையினரையும் பலிகொடுக்க வேண்டி வந்துவிட்டது.

இந்த இரண்டுவாரச் சண்டையில் காயப்பட்ட படையினரின் எண்ணிக்கை படைத்தரப்பிற்கு அதிர்ச்சியூட்டியது. இந்தக்காலப் பகுதியில் சுமார் 500 இராணுவத்தினர் காயமடைந்திருந்தனர். படைத்தரப்பைப் பொறுத்தவரை இது ஒரு புதிய - அதேவேளை, எதிர்பார்க்காத இராணுவ அம்சமாக இருந்தது. கேணல் கிட்டு பீரங்கிப் படைப்பிரிவின் சரமாரியானதும் - துல்லியமானதுமான எறிகணைப் பிரயோகமே இந்தப் புதிய சண்டைப் பரிமாணத்தை உருவாக்கியது.

ராங்குகளின் இழப்பு - படையாட்களுக்கு ஏற்படும் சேதம் - இவை இரண்டும் சிங்களத் தளபதிகளை சிந்திக்க வைத்தன. அதுவும் இரண்டேயிரண்டு வாரச் சண்டையில் 04 ராங்குகளையும் - சுமார் 600 படையினரையும் ஜயசிக்குறுய் களம் இழந்தது சாதாரண விடயமல்ல.

ராங்குகளின் இழப்பைத் தவிர்த்தபடியும் - ஆள் சேதத்தைக் குறைத்தபடியும் முன்னேற சிங்களத் தளபதிகள் திட்டமிட்டனர்;

மோட்டார் - ஆட்டிலறி பலத்தை அதிகரித்து - ராங்கிப்படை நகர்வுடன் அதை ஒன்றிணைத்துப் பயன்படுத்தி - நகரமுயன்றனர்.

அதன் பிரகாரம் ஆனி 3 ஆம் நாள், பலத்த எறிகணைப்பிரயோகத்துடன் எதிரிப்படை களத்தைத் திறந்து - விளக்குவைத்தகுளம் சந்தியை நோக்கி நகர்ந்தபோது பகைவனுக்கு எதிர்ப்பு குறைவாகவே இருந்தது. படையினரின் நகர்வு இலகுவாகியது. விளக்குவைத்தகுளம் சந்தியை படையினர் கைப்பற்றினர். கைப்பற்றிய வேகத்தில் அடுத்து இருந்த பன்றிக்கெய்த குளத்தைக் கையகப்படுத்தி - அதற்கடுத்திருந்த பனிக்க நீராவியடியையும் ஆனி 06 ஆம் நாள் படையினர் பிடித்தனர். மூன்று நாளில் 05 கி. மீ. தூரத்தைக் கடந்த திருப்தியில் படையினர் இருக்க - புலிகள் வேறொரு திட்டத்துடன் இருந்தனர்.

முன்னேறி நகர்ந்து - நிலம்பிடிக்கும் சண்டைகளில் படையினர் கவனத்தைச் செலுத்த,

முன்னேறி நிலைகொண்ட படையினர் மீது ஒரு வலிந்த தாக்குதலைத் தொடுக்க புலிகள் தங்களைத் தயார்படுத்தினர். தாக்கு வலயத்திலுள்ள படை நிலைகளில் பலத்தைச் சற்றுக் குறைத்து - தாக்குதல்களைச் சுலபமாக்குவதற்காக படைநகர்வை - புலிகள் மறைமுகமாக க ஞுபதித்தனர். வெற்றி மிதப்பில் படை நகர்வு நடந்தது.

ஆனி 10ம் நாள் நள்ளிரவு சிங்களப்படைத்தலைமைக்கு புலிகள் ஒரு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தனர். புலிகள் இயக்கத்தின் இராணுவ வழமைகளை நன்கு அறிந்திருந்ததால் ஜயசிக்குறுய் நிலைகள் மீது ஒரு வலிந்த தாக்குதலை படையினர் எதிர்பார்த்திருந்தனர்.

ஆனால், பெருமெடுப்பிலான வலிந்த தாக்குதலை எவரும் எதிர்பார்க்கவில்லை. வவுனியாவின் வாசலிலேயே அது நிகழும் என்று எவரும் ஊகிக்கவில்லை. அந்த தாக்குதல் ஜயசிக்குறுய் கட்டளைத் தலைமையகம் மீதே விழும் என்று எவரும் எண்ணவில்லை. அடி விழுந்தது. ஜயசிக்குறுய் பூகத்திற்கான வழங்கல் மையம் மீது அடி இறங்கியது. வெடிப்பொருள் களஞ்சியம் வெடித்துச்சிதறியது. தாக்குதலைத் தடுக்க வந்த இரண்டு ராங்குகள் தாக்குதலில் அழிந்தன. மூன்று மோட்டார்கள் அழிக்கப்பட்டன. இராணுவ வாகனங்கள் தீயில் எரிந்தன. சில, புலிகளின் கைகளிற்கு வந்தன. 400 படையினர் கொல்லப்பட்டனர். 570பேர் காயமடைந்திருந்தனர். நொச்சிமோட்டைப்பாலம் புலிவீரர்களால் தகர்த்தழிக்கப்பட்டது.

தாண்டிக்குளம் நடவடிக்கைத் தலைமையகத்திலிருந்தபடி ஜயசிக்குறுய் நடவடிக்கையை வழி நடத்திய பிரிகேடியர் வவுனியாவுக்கு தப்பியோடி உயிர்பிழைத்தார். தாக்கு வலயத்திற்குள் சிக்கி அகதிகளாகிய பல டசின் படையினர் துவக்குகளைத் துறந்து-வேட்டிகட்டி - தமிழ் மகன்களாய் உருமாறி - உயிர்பிழைத்தனர். முற்றுகைக்குள் அகப்பட்ட படையினர்க்குத்துணை செய்ய உதவிப்படையாக உலங்குவானூர்திகளில் வந்திறங்கி - சிறப்புக் கொமாண்டோக்கள் சண்டையிட்டனர். இதற்குள் அகப்பட்ட எம். ஐ. 24 வானூர்தி குண்டடிபட்டு - களம் அகன்றது.

தாண்டிக்குளம் மீதான வலிந்த தாக்குதல் முடிவுடன் ஜயசிக்குறுய் நடவடிக்கை ஒரு மாதத்தைப் பூர்த்தி செய்தது. இந்த ஒரு மாதச் சண்டையில் புலிகளின் தரப்பில் 185 போராளிகள் வீரச்சாவடைந்தனர். ஆனால் படைத்தரப்பில் 500 பேர் வரை பலியாகியிருந்தனர். அண்ணளவாக 1000 படையினர் காயமடைந்திருந்தனர்.

இந்தவகையில் 1500 படையினரை ஜயசிக்குறுய் களம் ஒரு மாதத்தில் இழந்தது. இந்த இழப்பை ஈடு செய்து - அடுத்த சண்டைக்காக படைத் தரப்பை தயார்படுத்த அவர்களுக்கு இரண்டு வாரம் தேவைப்பட்டது. தாண்டிக்குளத் தாக்குதலால் ஜயசிக்குறுய் படையினர் சோர்வடைந்திருந்தனர். தூரப் பயணம் புறப்படும் போது வாசலிலேயே சறுக்கி விழுவது போல ஜயசிக்குறுய் நடை பயணத்தின் ஆரம்பமே அடிவாங்கி அபசகுனமாகியது. இந்த நிலையில் ஒரு இராணுவ வெற்றியை ஈட்டி - இந்தச் சோர்வையகற்றி - துருப்புக்களுக்கு உற்சாகமூட்ட படைத்தலைமை விரும்பியது.



www.eelamview.com

www.eelamview.com



புளியங்குளத்தைக் கைப்பற்றி அந்த இராணுவ வெற்றியைப் பெற இராணுவத் தலைமை திட்டமிட்டது. புளியங்குளத்திற்கு மிக அண்மையில் 04 கி.மீ. தூரத்திலேயே படையினர் நிலைகொண்டிருந்ததால் வெற்றி பற்றி அவர்கள் நம்பிக்கையுடன் இருந்தனர்.

தாண்டிக்குளம் மீதான பெருந்தாக்குதல் நடந்து சரியாக 12ம் நாள் (22.06.97) படையினர் நகர்வுச் சண்டையை ஆரம்பித்தனர். மாலதி படையணி நிலைகொண்டிருந்த பகுதியை உடைத்து – உட்புகுந்து புளியங்குளச் சந்தியைக் கைப்பற்றப் படையினர் எடுத்த முயற்சியை – ராங்க் ஒன்றை அழித்து, 15 படையினரைக் கொன்று பெண்புலிகள் தடுத்து நிறுத்தினர். எனினும், சண்டை நடந்த இடத்திற்கு எதிர்ப்புறமாக – புளியங்குளம் நோக்கி நகர்ந்த படையினர் புளியங்குள சந்திக்கருகிலுள்ள பழையவாடியடியை அடைந்துவிட்டனர்.

ஆனி 24ம் நாள் – தாண்டிக்குளம் மீதான பெருந்தாக்குதல் நிகழ்ந்து 14ம் நாள் - ஜயசிக்குறுயின் முன்னரங்கப் பகுதியாக விளங்கிய பெரியமடு மீது பெருந்தாக்குதல் நிகழ்ந்தது.

வலிந்த தாக்குதல்களை நிகழ்த்தும் போது கேந்திர நிலைகளைத் தேர்ந்தெடுத்துத் தாக்கி - அழித்து, விளைவுகளை பல்பரிமாணம் கொண்ட தந்திரோபாய வெற்றியாக்க முயல்வது புலிகளின் வழமை.

தாண்டிக்குளம் - நொச்சிமோட்டை பெருந்தாக்குதல் நிகழ்ந்த போது ஜயசிக்குறுய் படையினர் இளைப்பாறிக்கொண்டிருந்தனர். இதனால், முன்னரங்கம் சாதாரண சிப்பாய்களால் நிரப்பப்பட்டு - சண்டைப் படையணிகள் பின்சென்று - கட்டளை மையப்பகுதியில் ஓய்வெடுத்தனர். ஆனால், மையப்பகுதியே புலிப்பாய்ச்சலுக்கு உள்ளானதால் பலியானவர்களில் பலர் சண்டைமுனைப் படையினராக இருந்தனர். வழங்கல் மையம் சிதைக்கப்பட்டது. கட்டளைப்பீடம் சின்னாபின்னமாகியது.

பெரியமடுத் தாக்குதல் நிகழ்ந்தபோது படையினர் புளியங்குளத்தைக் கைப்பற்ற முயன்றுகொண்டிருந்தனர். இதனால் முன்னரங்கம் முதல்தர சிப்பாய்களால் நிரம்பியிருந்தது. இந்தத் தடவை புலிகள் முன்னரங்கத்தையே குறிவைத்துப் பாய்ந்தனர். ஜயசிக்குறுயின் சண்டைப்படையணியை தாக்கியபடி எதிரிப்படையின் மோட்டார் ஏவு தளத்தைக் கைப்பற்றிவிட புலிகளின் ஒரு அணி முயன்றது. ஏவு தளத்தைக் காவல்காத்த படையினர் எதிர்ப்பை மூர்க்கமாய்க் காட்ட, லெப். கேணல் தளம் களம்புகுந்து எதிர்ப்பை உடைக்கும் சண்டைக்குத் தலைமை தாங்கினான். ஏவுதளம் வீழும் தறுவாயில் பகைவன், தனது மோட்டார்களைத் தானே அழித்துவிட்டு பின்வாங்கினான். நெருக்கமாக நடந்த அந்த தீவிர சண்டையில் தளபதி தளம் களப்பலியானான். சாதனைகள் பல செய்த அந்தச் சண்டைத் தளபதியுடன் இந்தத் தாக்குதலில் 94 போராளிகளும் வீரச்சாவடைந்தனர். படைத்தரப்பில் 185 பேர் கொல்லப்பட்டனர். 200 பேர் வரையில் காயப்பட்டனர். கொல்லப்பட்ட படையினருள் பெரியமடு படைத்தள கட்டளைப்பீட அதிகாரியான கேணல் டீனும் ஒருவர். இந்தத் தாக்குதலின் விளைவாக புளியங்குளம் பழையவாடியில் தரித்து நின்ற இராணுவம், தானாகவே பெரியமடுவுக்கு பின்வாங்கியது.

புளியங்குளத்தில் வைத்து - பெருமெடுப்பில் – ஒரு மறிப்புச் சண்டை புரிய தலைவர் பிரபாகரன் முடிவெடுத்தார். அதற்காக புளியங்குளச் சந்தியை உள்ளடக்கிய பகுதியை ஒரு படைத்தளமாக்கி – அரண்களமைத்து – ஒரு நீண்டகால நேரடிச் சண்டைக்குத் தயாராகும்படி புலிவீரர்களைப் பணித்தார்.


எதிரியின் குண்டுத் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்கக் கூடிய வகையில நிலைகளை அமைத்த புலிகள் துணிகரமான முறையில் - புதுவிதமான சண்டைக்குத் தயாரானார்கள். ஒரு சில கிலோ மீற்றர்களை விட்டமாகக் கொண்ட அந்த படைத்தளத்தை பகைவனும் கண்டுகொண்டான். புலிகளின் புளியங்குள தள அமைப்பு தற்கொலை முயற்சி என்றே படைத்தரப்பு கருதியது. தாங்கள் விரும்பியது போல – ஒரு சிறு பகுதியில் - புலிகள் கூடி நின்று தமக்கு வாய்ப்பளிக்கின்றனர் என்று அது எண்ணியது.

புளியங்குளம் மறிப்புச் சண்டை ஆரம்பமானது. பகைவனது பீரங்கிப் படைப்பிரிவின் பிரதான குறியிலக்காக - பரப்பளவில மிகவும் சிறிய புளியங்குளத் தளம் அமைந்தது. கிபிர் குண்டுவீச்சு விமானங்களினதும் - தாக்குதல் உலங்கு வானூர்திகளினதும் தாக்கு வலயமாக அந்தப் படைத்தளம் மாறியது. குண்டுவீச்சுக்களாலும் – எறிகணை வெடிப்புக்களாலும் களம் அதிர்ந்தது. இதேவேளை, புளியங்குளத்தைச் சூழ படையினர் அரைவட்ட வடிவில் அரணமைத்தனர். குஞ்சுகளைத் தாக்க அலையும் பருந்துகள் போல புலிகளின் அரண்களை உடைத்து – உட்புகுந்து நாசம் செய்ய பகைவனின் ராங்குப்படையும் முயன்றது.

புளியங்குளத் தளத்திற்குப் பாதுகாப்பாக ஒரு கிலோ மீற்றர் முன்னே – வேகத்தடையைப் போன்று – மாலதி படையணி ஒரு வியூகத்தை அமைத்து – தளத்திற்கு பாதுகாப்புக் கொடுத்தது. புளியங்குள தளத்தினுள்ளே சாள்ஸ் அன்ரனி படையணியும் சிறுத்தைப் படையணியும் இம்ரான் - பாண்டியன் படையணியும் இணைந்து நின்றன.

பகைவன் எண்ணியதுபோல முன்னரங்கத்தை உடைத்தெறிந்து தளத்தினுள்ளே உட்புகமுடியாததால் தளத்தை முழுமையாக முற்றுகையிட்டு- அடைத்தெறிய விரும்பினான். இதற்காக நெடுங்கேணியிலிருந்து நகர்ந்தபடையும் புளியங்குள தள முற்றுகைக்கு உதவுவதற்காக நெருங்கி வந்தது. முற்றுகையை தடுப்பதற்காக புலிகள் புதிய வியூகமமைத்து தளத்தின் பாதுகாப்பை விரிவுபடுத்தினர். இந்த முற்றுகை எதிர்ப்புக்களாலும் முறியடிப்பு முயற்சிகளாலும் களம் மெது மெதுவாக விரிவடைந்தது. விரிந்த களத்தின் காவலர்களாக ஜெயந்தன் படையணி பொறுப்பேற்றது. இவர்களுடன் கன்யா படையணியும் – அரசியல்துறைப் படையணியும் இணைந்து கொண்டன.

புளியங்குள மறிப்புச்சண்டை தீவிரமாக நடந்துகொண்டிருக்கும்போது மீண்டுமொரு வலிந்ததாக்குதலை நடாத்த புலிகள் முடிவெடுத்தனர். ஜயசிக்குறுய் படையினரின் வழங்கல் மையமாக குறித்த அந்தநேரத்தில் ஓமந்தை படைத்தளம் விளங்கியது. எனவே, இம்முறை ஓமந்தையே தாக்குதலின்






www.eelamview.com

www.eelamview.com



குறியிலக்காகியது. ஆவணி 1ம் நாள் பாதையின் இருமுனைகளிலிருந்தும் ஓமந்தை - இறம்பைக்குளம் பகுதி தாக்கப்பட்டது. ஜயசிக்குறுய் படையினர் மீது நடாத்திய இந்த மூன்றாவது வலிந்த தாக்குதலில் 135 படையினர் கொல்லப்பட்டனர். படை நடவடிக்கை தொடங்கி மூன்றுமாதகாலம் முடிவடைய முன்னர் நடைபெற்ற இந்த மூன்றுபெரும் வலிந்ததாக்குதல்கள் நடவடிக்கைப் படையினரை நிலைகுலையச்செய்தது. புலிகள் பலவீனமாக இருக்கின்றனர் என்ற கணிப்பையும் வேகநகர்வு பற்றிய சிங்களத்தின் கனவுகளையும் அவை சிதைத்தன.

இதேவேளை, ஆவணி 19 ஆம் திகதி அதிகாலை, புளியங்குளத் தளப்பகுதியில் ஒரு சண்டை ஆரம்பமானது. நெடுங்கேணியில் இருந்து நகர்ந்து புளியங்குளத்தை அண்மித்த படை - மேலும் அருகே வர முயற்சிப்பது போல- எறிகணைகளை சரமாரியாக ஏவிச் சுட்டபடி நகர்ந்தது.

புளியங்குளத் தளத்தின் தென்கிழக்கு முனையில் இந்த மறிப்புச் சண்டை நடந்துகொண்டிருந்த போது - தளத்தின் வடமேற்குப் பகுதியில் இருந்த பகைவனின் படைவீட்டிலிருந்து மின்வெளைப்புறப்பட்டு வந்த ஆறு ராங்க்குகள் அரணுடைத்து தளம்புக முயன்றன. இரண்டு ராங்க்குகளை முன்னரங்க வாசலிலேயே புலிகள் தகர்த்தனர். இன்னொன்று வெளியே நின்றவாறு தளத்தினுள் புக வசதியாக உதவிச் சூடுகளை வழங்கிக் கொண்டு நின்றது. இதேவேளை, இரண்டு ராங்க்குகளும் ஒரு துருப்புக்காவியும் வெற்றிகரமாக அரணுடைத்து - தளத்தினுள்ளே புகுந்துவிட்டன.

புலிகளும் - சிங்களவரும் ஒரு தளத்தில நின்றன. இந்த திடீர்ச் சூழலால் தளம் திகைத்தது. வீழ்ச்சியின் விளிம்பில் தளத்தின் நிலை இருந்தது. தளத்தின் அதிபதிகள் விரைவாகச் செயற்பட்டனர். மேலதிக ராங்க்குகளும் - துருப்புக்களும் தளத்தினுள்ளே புகமுடியாதவாறு உடைத்த உடைப்புகளை அடைக்க முயன்றனர். முன்னரங்க வீரர்கள் அதைச் செய்துவிட்டு - செய்தியை அறிவித்தனர்.

ஐந்து நிமிடங்களுக்கு முன்னர் இருந்த நிலை இப்பாதில்லை. இப்போது, ராங்க்குகளும் துருப்புக்காவியும் புலிகளின் முற்றுகைக்குள் அகப்பட்டுவிட்டன. உள்ளிருந்து தாக்குவதா அல்லது வெளியேறித் தப்பியோடுவதா என்று குழம்பியபடி பகைவனின் கவசங்கள் பதட்டத்தில் உருண்டன.

தடத்தில் அகப்பட்ட குழுவன் மாடு போல துருப்புக்காவி அங்கும் இங்கும் ஓடியது. ஆர். பி.ஜிகளால் புலிவீரர் தாக்கினர். அடியை வாங்கிக்கொண்டு விரைவாக ஓட முடியாது - பெண்போராளிகளது அரணுக்கு முன்னால் நின்று தத்தளித்த போது பெண்புலிகள் நடாத்திய, இறுதித்தாக்குதலுடன் துருப்புக்காவி புலிகள் வசமானது.

இதேவேளை, ரி55 ரக ராங்க், மூன்று அடிகளை வாங்கிக்கொண்டு - அரண்களை ஏறிக்கடந்து - தளப்பாதுகாப்பிற்காக சற்றே தள்ளிப்போடப்பட்டிருந்த மாலதி படையணியின் நிலைகளையும் கடந்து தப்பியோடியது. சகல முனைகளிலும் சண்டைகள் நடந்ததால் களம் இறுக்கமாக இருந்தது. இத்தகைய சூழலில் தான் புளியங்குள பிரதான தளத்தினுள் இருந்து வட-கிழக்குப் பகுதியூடாக ஒரு ராங்க் வெளியேறி - தமது நிலையை நோக்கி வந்தபோது மாலதி படையணியினர் தாக்கமுயற்சிக்கவில்லை. எமது தளத்தினுள் இருந்து, எம்மை நோக்கி வருவது எமது ராங்க்கா! எதிரி ராங்க்கா! என்று அவர்கள் குழப்பமடைந்தனர். குழப்பத்தைத் தீர்க்க - பிரதான தளத்துடன் தொடர்பு கொண்டு - உறுதிப்படுத்தி - தாக்குதலைத் தொடுப்பதற்கிடையில இருந்த ஒன்று, இரண்டு நிமிடநேர இடைவெளிக்குள் அந்த அதிஸ்டக்கார ராங்க் எதிரிவலயத்திற்குள் நுழைந்து தலைனை தறகாத்து விட்டது. மற்றைய ராங்க்குகளும் வந்த வேகத்திலேயே தளத்தின் மேற்கு முனைகளுக்கூடாக



புள்ளிகளிட்டு தலைவன் போதித்த போருத்திகளுக்கு உருப்புனைந்து போர்க்கோலமிடும் புலித்தளபதிகள்.

மின்னல் வேகத்தில் தப்பிச்சென்று விட்டன.

அந்த அதிஸ்டத்தை மூலதனமாக்கிக்கொண்டு அடுத்த நாள் விடியற்காலை (20. 08. 97) அதே மாலதி படையணி நிலைகொண்டிருந்த பகுதியை பகைவனின் ராங்க்குகள் மூர்க்கத்தனமாகத் தாக்கின. சண்டை கடுமையாக நடந்தது. ராங்க் ஒன்று அழிக்கப்பட்டது. வேகத்தடுப்பியாகச் செயற்பட்ட பாதுகாப்பு நிலைகளை விட்டு மாலதிபடையணி பின்வாங்கி பிரதான தளத்துடன் இணைந்துகொண்டது. இதனால், குறித்த நிலைகள் பகைவன் வசமானது.

புளியங்குளத் தளத்திற்கு பாதுகாப்பாக, வேகத்தடை போன்று விளங்கிய பாதுகாப்பு ஏற்பாடுகள் விலக்கிக் கொள்ளப்பட்டதால் பகைவன் சற்று உற்சாகமடைந்திருந்தான். இன்னொரு ராங்க் நகர்வைச் செய்து தளத்தை உடைத்து - உள்நுழைய சிங்களத்தின் கவசப்படை திட்டமிட்டது. ஆறு நாட்களில் அதைச் செயற்படுத்தியது.

ஆவணி 26ம் நாள் தென்புறமிருந்து புளியங்குளத்தை நோக்கி கவசப்படையணி பெருந்தாக்குதலைத் தொடுத்தது. குண்டுவீச்சுக்களும் - எறிகணைத் தாக்குதல்களும் கவசப்படையின் நகர்விற்கு உதவின. எனினும், புலிகளின் அரண்களை அதனால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

அன்றைய சண்டையிலும் ஒரு ராங்க் அழிக்கப்பட்டது.

சுமார் ஐந்துமாத காலமாக புளியங்குள மறிப்புச் சண்டைகள் இடம்பெற்றன. பகைவன் தன்னாலான அனைத்துவகைத் தாக்குதல் முயற்சிகளையும் சகல விதமான தந்திரோபாயங்களையும் பயன்படுத்திப் பார்த்தான். குண்டுச் சிதறல்களால் நிலைகள் சின்னாபின்னமாகினாலும் - அதற்குள் உள உறுதியுடனும் ஓர்மத்துடனும் நின்று நிலைத்து பகைப்படையை உள்ளே நுழையவிடாது தடுத்து - மறிப்புச் சண்டையின் அதி உயர் போராற்றலை புளியங்குளச் சண்டையில புலிகள் வெளிப்படுத்தினர்.

புலிகளின் புளியங்குள தளத்தை உடைத்து - உட்புகமுயல்வதென்பது கற்சுவரை வெறுந்தலையால் உடைத்து - உட்புகமுனையும் வேலை என்பதை- சிங்களப்படை அனுபவத்தால் உணர்ந்துகொண்டது. புளியங்குள தளத்தை வட்ட வடிவமாக சுற்றிவளைத்து - நெருங்கி நின்று - முற்றுகையிடுவதென்பதும் இயலாத இராணுவ முயற்சி என்பதையும் கண்டு கொண்டது.

இந்த நிலையில் புளியங்குளத் தளத்திற்கான பிரதான வழங்கல் பாதையைக் கைப்பற்றி- தளத்தைத் தனிமைப்படுத்தி - புளியங்குளத்தை புலிகளே கைவிடும்படி நிர்ப்பந்திக்கும் தந்திரோபாயத்திட்டத்தை படைத்தலைமை அமுல்படுத்த விரும்பியது.

புளியங்குளத்திற்கு வடக்கே 05கி. மீ. தூரத்தில் இருந்த புதூர்ச் சந்தியை நோக்கி காடுகளுக் கூடாக ஒரு துணிகர நகர்வைச் செய்து - அதைக் கைப்பற்றி - அங்கே நிலைகொண்டு புளியங்குளத்தின் இருப்பை சிக்கலாக்க படைத்தலைமை முயன்றது.

புரட்டாதி 10ஆம் நாள் இரவின் இருளில் - பிரதான பாதையின் கிழக்குப்புறமாக நகர்ந்துசென்ற எயர்மொபைல் படையணி என்ற பெயருடைய பகைவனின் சிறப்புக் கொமாண்டோ அணி, புதூர்ச் சந்தியைக் கைப்பற்றி தன்வசப்படுத்தியது.

இதேசமயம் பிரதான பாதைக்கு மேற்காகவும் ஒரு படையணி புதூர்ச்சந்தியை நோக்கி இருட்டுக்குள்ளால் இரகசியமாக விரைந்து - நகர்ந்ததை புலிகளின் அணிகள் கண்டு அதனுடன் மோதின.

பகைத்தலைமையின் தந்திரோபாய நோக்கம் தெளிவாகத் தெரிந்தது. இப்போது புலிகளுக்கு ஒரேயொரு தேர்வு மட்டும்ம இருந்தது. புளியங்குளத்தைக் கைவிடுவதா! அல்லது புதூர்ச் சந்தியை மீளக் கைப்பற்றி புளியங்குளத்தைப் பாதுகாப்பதா!

புளியங்குளத்தைப் பாதுகாப்பதில் புலிகள் உறுதியாக இருந்தனர் எனவே அன்று இரவே புதூர்ச் சந்திப் பகுதிமீது புலிகள் ஒரு முறியடிப்புத் தாக்குதலைத் தொடுத்தனர். சந்தியில் வந்து குந்திய கொமாண்டோப் படையினர் தங்களைத் தற்காத்துக்கொள்ளும் தயாரிப்புக்களைச்செய்ய முன்னரே தாக்கப்பட்டனர்.

கேணல் கிட்டு பீரங்கிப் படைப்பிரிவின் துல்லியமான எறிகணைத்தாக்குதல் - கொமாண்டோப் படையை இருத்தி எழுப்பியது. ஜெயந்தன் படையணியும் - கடற்புலிப்படையணியும் களமிறங்கி தாக்குதலைத் தொடுத்தன. சிக்கலான நிலைமைகளை சமாளிக்கவெனப் பயிற்றப்பட்ட எயர்மொபைல் படையணி, தான் பிடித்த நிலத்தை மட்டுமல்ல தங்களையே பாதுகாக்க முடியவில்லை. விடியமுன்னர் புதூர்ச்சந்தியை புலிகள் மீண்டும் கைப்பற்றினர். இந்த இரவுச் சண்டையில் சுமார் 200 படையினர் பலியாகியிருந்தனர். 500 பேரளவில் காயப்பட்டிருந்தனர். இந்த முறியடிப்புத் தாக்குதலின் விளைவாக எயர்மொபைல் படையணியின் கட்டளைத்தளபதி பிரிகேடியர் சிவலிங்கசேகர பதவி நீக்கப்பட்டு இடம் மாற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

வெல்லப்பட முடியாத மறிப்புச் சண்டைக்களமாக புளியங்குளம் தொடர்ந்தும் இருந்தது. புதூர்ச்சந்திக்கு நகர்ந்ததுபோல புரட்டாதி 30ம் நாள் கனகராயன்குளச் சந்திப்பக்கமும் ஒரு நகர்விற்கு படைதரப்பு முயன்று- தோற்றது இவற்றுடன் புளியங்குளச் சண்டையை படையினர் தவிர்த்துக்கொண்டு-வேறுமுனையில்





www.eelamview.com

www.eelamview.com



சண்டையை ஆரம்பிக்கத் திட்டமிட்டனர்.

தாண்டிக்குள வலிந்த தாக்குதலின்போதும் – பெரியமடு வலிந்த தாக்குதலின்போதும்- ஓமந்தை வலிந்த தாக்குதலின் போதும்- ஜயசிக்குறுய் படையினர் கைப்பற்றிய பிரதான பாதைக்கு கிழக்காகவும் - மேற்காகவும் இருந்த நிலப்பகுதியை உபயோகித்து - புலிகளின் அணிகள் - இருமுனைத் தாக்குதலைத் தொடுத்ததாலேயே தாக்குதலை எதிர்கொள்ள முடியாது ஜயசிக்குறுய் படையினர் திக்குமுக்காடினர் என்று படைத்தலைமை கணித்தது. இந்த நிலையில் பாதையின் கிழக்குப் பகுதியை புலிகள் பயன்படுத்துவதிலிருந்து தடுப்பதற்காக அந்தப் பகுதி முழுவதையும் இராணுவ கட்டுப்பாட்டு வலயமாக மாற்ற அது முடிவெடுத்தது. நெடுங்கேணிப்பகுதியில் தரித்து நின்ற படையினரை புளியங்குளம் நோக்கி நகரச் செய்து – ஒரு நிலப்பூட்டையிட்டு - பாதையின் கிழக்குப் பகுதியை இராணுவ வலயமாக்கியது.

நிலம் விழுங்கியபடி வேறு திசைவழியே நகரும் நோக்கத்துடன் திறக்கப்பட்ட நெடுங்கேணி களமுனையை, பாதை பிடிப்பதற்கும் – பிடித்ததை பாதுகாத்துக்கொள்ளவென்றும் திசை திருப்பவேண்டிய கட்டாயத்தை இந்த வலிந்ததாக்குதல்கள் செய்தன. இதனால், ஜயசிக்குறுய் மூலத்திட்டத்தில் பாரிய மாற்றம் நடந்தது.

முனையை பகைவன் திறந்து வைக்க முன்னர் அவனது வழங்கல் மையத்தை தாக்கி – கைப்பற்ற புலிகள் திட்டம் தீட்டினர். திகதியும் குறித்தனர். எனினும் படையினரும் அவசரப்பட்டனர்.

ஐப்பசி 04ஆம் நாள் துணிகரமானதொரு நெடுந்தூர இரவு நகர்வை கரிப்பட்டமுறிப்புச் சந்திவரை படையினர் செய்தனர். சுமார் 09 கி. மீ. தூரத்தை அவர்கள் ஊருளின் துணையுடன் நடந்து கடந்தனர். களங்களை விரிவாக்கினால் புலிகளின் எதிர்ப்பு சக்தி பரவலாக்கப்படும். அவ்விதம் நடந்தால், அது புலிகளுக்கு பாதகமாக முடியும் என்று படைத்தலைமை கருதி - கள விஸ்தரிப்புக்களைச் செய்தது. முன்னை ; முன்னால் எடுப்பதுபோல விரிவாக்கப்பட்ட களங்களிலெல்லாம், புலிகள் காட்டமான வலிந்த தாக்குதல்களை நடாத்தியும் – திறக்கப்பட்ட புதிய சண்டைமுனைகளிலெல்லாம் படையினருக்கு மோசமான விளைவுகளைக்கொடுக்கும் முறியடிப்புத் தாக்குதல்களைத் தொடுத்தும படையினருக்குப் பதிலடி கொடுத்தனர்.

ஐப்பசி 05ம் நாள் கரிபபட்டமுறிப்பை படையினர் கைப்பற்றிய அன்றிரவே கரப்புக்குத்தி - விஞ்ஞானகுள வழங்கல் மையம் மீது பெரும் எடுப்பிலான ஒரு வலிந்ததாக்குதலை புலிகள் நடத்தினர்.

ஜயசிக்குறுய் படையினர் மீது நடாத்தப்பட்ட வலிந்த புலிகளின் இலக்கு என அவர்கள் தவறாகக் கணித்தனர். இதனால் நெடுங்கேணிப்படையினரின் ஆட்டிலறிவீச்சின் குறியிலக்காக கரிப்பட்டமுறிப்புப் பகுதியே இருந்தது. அன்றிரவு முழுவதும் நடந்த எறிகணை வெடிப்பால் கரிப்பட்டமுறிப்புப்பகுதி அதிர்ந்தது. இதனால், உண்மையான குறியிலக்கைத்தாக்கிய புலிவீரர்களின் மீதான எதிர்த் தாக்குதலின் கடுமை குறைந்திருந்தது. கைப்பற்றப்பட்ட இராணுவ உபகரணங்களை கலபமாகவும் – பாதுகாப்பாகவும் அப்புறப்படுத்த அது உதவியது. இந்தத் தாக்குதலில் ஒரு ராங்க் அழிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

கரிப்பட்டமுறிப்பு மீது நடாத்தப்பட்ட திசை திருப்பல் தாக்குதலும் சிறிது காட்டமாகவே இருந்தது. கைப்பற்றிய அன்றிரவே பதில் தாக்குதல் நடாத்தப்பட்டதால் படையினர் சரியான காப்பு வசதிகளை செய்து முடித்திருக்கவில்லை. இதனால் கரிப்பட்டமுறிப்பு படையினரும் இழப்புக்களைச் சந்தித்தனர்.

கரிப்பட்டமுறிப்புக்கு நகர்ந்த படைக்கு வழங்கல் பணி செய்யவென காட்டுப்பாதையை படையினர் திருத்தி அமைத்து - செப்பனிட்டனர். அதேவேளை கற்கிடங்கு மற்றும் விஞ்ஞானகுளம் பகுதியில் படையினரின பிரசன்னமும் அதிகரித்தது.

அதாவது மாங்குளத்திற்கு மீதான தாக்குதலின் பின்னர் கழிந்த இரண்டு மாத அமைதி நிலையை அடுத்து மார்கழி 04 ஆம் நாள் கனகராயன் குளச் சந்தியைக் கைப்பற்றப் படையினர் ஒரு மும்முனைத் தாக்குதலைத் தொடுத்தனர்.

பிரதான பாதை வழியே கனகராயன்குளச் சந்தியை நோக்கி ஒரு முனையாலும்,

மன்னகுளத்தை நோக்கி 'கிறீன்பரேட்' டிடம் பயிற்சி பெற்ற கொமாண்டோ அணி இன்னொரு முனையாலும்,

கனகராயன் குளத்திற்கும் மன்னகுளத்திற்கும் இடையில் உள்ள முத்தர் குளம் வழியாக எஸ். எவ். அணி - மூன்றாவது முனையைத்திறந்தும் – கனகராயன் குளத்தைக் கைப்பற்றும் இலக்குடன் சிங்களப்படை நகர்ந்தது.

ஒவ்வொரு முனையிலும் சண்டை தொடங்கியது. பிரதான பாதை வழியே நகர்ந்த படையினரும் - முத்தர்குளம் வழியே நகரமுயன்ற எஸ். எவ். படையணியும் தடுத்து நிறுத்தப்பட்டன.


ஆனால், மன்னகுளம் நோக்கி வந்த கொமாண்டோப் படையினரை எதிர்த்து அங்கே நிலைகொண்டிருந்த மாலதி படையணியும் – புலனாய்வுத்துறைப் படையணியும்– திருமலை படையணியும் கடுமையாக மோதின. புலிகளின் சில அரண்களை உடைத்து - உட்புகுந்த கொமாண்டோப் படையினரை குறிவைத்து ஜெயந்தன் படையணியினர் ஒரு முறியடிப்புத் தாக்குதலைத் தொடுத்தனர். சண்டை தீவிரமாக நடந்தது. புலிகள் புதூர்ச் சந்தியில் சாதித்ததை - மன்னகுளத்தில் சாத்தியமற்றதாக்க கொமாண்டோப் படையினர் போராடினர். முதலில், பிடித்த நிலத்தை தக்க வைக்க சண்டையிட்டனர். பின்னர் பாதுகாப்பாக தப்பிப்போக சண்டை இட்டனர்.

ஆனால், புலிகள் நடாத்திய பகல் நேர முறியடிப்புத் தாக்குதல் வீரம் செறிந்ததாகவும் தந்திரோபாயங்கள் நிறைந்ததாகவும் இருந்தது. சிங்களத்தின் கொமாண்டோக்கள் திகைத்து - பதறினர். இறுதிக்கட்டத்தில் ஜெயந்தன் படையணியும் களம் புகுந்து நிலத்தை மீட்டெடுக்கும் பணியில் இறங்கியது. அமெரிக்க சிறப்புப் படையான 'கிறீன்பரேட்' டிடம் சண்டைப் பயிற்சி பெற்ற சிறப்புக் கொமாண்டோக்கள் ஏறக்குறைய அழிந்தே போயினர். இந்த முறியடிப்புத் தாக்குதலில் 300 கொமாண்டோக்கள் கொல்லப்பட்டனர். அதேயளவு காயமடைந்திருந்தனர். 37 போராளிகள் களப்பலியாகியிருந்தனர்.

புளியங்குளத்திலிருந்து புலிகள் நடாத்திய தந்திரோபாயப் பின் வாங்கலின் விளைவை, மன்னகுளத்தில் படையினர் அனுபவித்தனர்.

மன்னகுளம் முறியடிப்புத் தாக்குதலின் விளைவுகளை ஜீரணித்து பழைய நிலைக்கு மீண்டுவர ஜயசிக்குறுய் படைக்கு இரண்டு மாதங்களும் ஒரு வாரமும் பிடித்தது. இதேவேளை, புலிகள் மீண்டுமொருமுறை தந்திரோபாயப்பின்வாங்கலுக்கு முடிவெடுத்தனர். கனகராயன் குளத்தைக் கைவிட்டு மாங்குளம் முனையைப் பலப்படுத்தும் முடிவைச் செயற்படுத்தினர். இதன்பின்னர் கனகராயன்குளப் பகுதியை படையினர் சண்டைகளின்றிக் கைப்பற்றினர்.

இப்போது மாங்குளத்தைக் கைப்பற்றுவதற்கான சண்டைகளில் ஈடுபட படைத்தலைமை தயாரிப்புக்களைச் செய்தது. புளியங்குளத்தை ஒரு களப்பகுதியாக்கியது போல மறிப்புத் தாக்குதலுக்குரிய பாரிய களப்பகுதியாக மாங்குளம்



தலைவன் சொன்ன வேதம் கேட்டு வினையாற்றும் தளபதிகள்.

நெடுங்கேணியைக் கைப்பற்றிய படைப்பிரிவு – அங்கிருந்து நகர்ந்து ஒட்டுசுட்டான் வழியாக முல்லைத்தீவிற்கு அல்லது புதுக்குடியிருப்பிற்கு என்ற ஊகங்கள், அன்றைய நாட்களில் கொழும்பில் எழுப்பப்பட்டன. ஆனால், இந்த நிலம் விழுங்கும் திட்டத்தைக் கொண்ட களமுனை, ஈற்றில், பாதைபிடிப்பதற்கான வேறொரு சண்டை முனையைத் திறப்பதற்கே பயன்பட்டது.

கரிப்பட்டமுறிப்பு என்ற புதிய சண்டைமுனையைத் திறக்க பகைவன் ஆயத்தங்கள் செய்தான்.

கரப்புக்குத்தி – விஞ்ஞானகுளத்தை வழங்கல் மையமாகக் கொண்டு புதிய சண்டைமுனை ஒன்று திறக்கப்படப் போகின்றதென்பதை புலிகள் முன்னரே ஊகித்தறிந்து கொண்டனர். புதிய சண்டை

தாக்குதல்களில் இது வித்தியாசமானது. பெருந்தொகையிலான வெடிபபொருட்களையும் - இராணுவ உபகரணங்களையும் – மரபுவழிச் சண்டைக்குத் தேவையான வாகனங்கள் – புல்டோசர்களையும் – இங்கிருந்து புலிகள் தாராளமாகக் கைப்பற்றினர்.

வழங்கல் மையத்தின் மீது தாக்குதல் நடைபெறும்போது அதற்கு வெளியில் இருந்து உதவிகள் வரவிடாது தடுப்பதற்காக ஒரு திசை திருப்பல் தாக்குதலை கரிப்பட்டமுறிப்பு படையினர்மீது புலிவீரர்கள் நடாத்தினர். கரிபபட்ட முறிப்பை புலிகள் தாக்குகின்றனரா! கரப்புக்குத்தி - விஞ்ஞானகுளத்தை தாக்குகின்றனரா! என்பதைக் கண்டறிய படையினரால் முடியவில்லை. கரிப்பட்ட முறிப்பே

அண்டிய பகுதிக்கு களம் எடுத்துச் செல்லப்பட்டது. படையினரின் கள விஸ்தரிப்பிற்கு பதிலளிப்பதுபோல போராளிகளை நிறுத்த புலிப்படைக்கு ஆட்தொகை போதாது. எனவே சில இடங்களிலிருந்து தந்திரோபாயப் பின்வாங்கலைச் செய்து - தேவையான இடங்களில் சண்டைக்குத் தயாராவதைத் தவிர புலிகளுக்கு வேறு வழிகள் இருக்கவில்லை.

இந்தச் சூழ்நிலையிலேயே புளியங்குளத்திலிருந்து பின்வாங்கி கனகராயன் குளசசந்திப் பகுதியைத் தளமாக்கி சண்டைக்குத் தயாராக தலைவர் பிரபாகரன் தீர்மானித்தார். புளியங்குளத்தை புலிகள் கைவிட்டபின்னரே படையினர் அதைக் கைப்பற்றினர்.

கரப்புக்குத்தி, விஞ்ஞானகுளம்



www.eelamview.com

www.eelamview.com



மாற்றப்பட்டது. மாங்குளத்திற்கு கிழக்கே இருக்கின்ற ஒலுமடுவும் மேற்கே இருக்கின்ற மூன்று முறிப்புச் சந்தியும் மாங்குளத்தின் இரு முனைகளாகின.
பிறந்துள்ள புதியவருடம் உயிரிழப்பின்றி கரும்புலிகள் நடாத்திய ஒரு உலங்குவானூர்தி அழிப்புடன் ஆரம்பமானது. தை 3ம் நாள் படையினருக்கு ஆச்சரியத்தை ஊட்டிய அந்த கொமாண்டோத் தாக்குதல் நிகழ்ந்தது. மழை பெய்து வீதியோரப் பாதை சேற்று இருந்த அந்த நேரத்தில், போக்குவரத்து உலங்குவானூர்தியான எம். ஐ 17 வழங்கல் வேலையைச் செய்துகொண்டிருந்தது. கரும்புலிகளின் தாக்குதலில் அந்த வானூர்தி முழுமையாக அழிந்தது.

புதிய ஆண்டில் மாங்குளத்திற்கான சண்டைகள் ஆரம்பமாகின—

மாசி 14 ஆம் நாள் மன்னகுளப்பகுதியில் இருந்து மூன்று முறிப்புச் சந்தியை நோக்கி ஒரு இரகசிய நகர்வைச் செய்து - தேவையான இடத்தில் புலிகளின் அரண்களைத் தாக்கி அழித்து – சந்திப்பகுதியை கைப்பற்ற படையினர் திட்டமிட்டனர். மாங்குளத்திற்கு மேற்கே - மாங்குளம் மல்லாவி பாதையில் – 3 கி. மீ. தொலைவில் மூன்று முறிப்புச் சந்தியுள்ளது. இந்தச் சந்திப்பகுதியை கைப்பற்றினால் மாங்குளம் தளத்தின் மேற்குப்புற பாதுகாப்பை கைப்பற்றியதற்கு ஒப்பானதாகும் என்று படையினர் கணித்து படைநகர்த்தினர்.

கேணல் கிட்டு பீரங்கிப் படைப்பிரிவு ஒரு இராணுவ வேட்டைக்கு தயாராகியது. மோட்டார் குழாய் துடைத்து - இலக்குகளை சரிபார்த்து தூரம் கணித்து - எறிகணைகளையும் எண்ணிவைத்து உத்தரவிற்காக காத்து இருந்தது. முன்னரங்கொன்றில் மூட்டுப்பட சண்டை தொடங்கியது. புலிகளின் மோட்டார்கள் இயங்கத் தொடங்கின. படையினரது பீரங்கிப் படையும் பதில் மழை பொழிந்தது. புலிகள் நிலைகளுக்குள்ளே காப்பெடுத்துச் சண்டையிட்டனர். வந்த படையினர் நிலைகளில்லாது தடுமாறினர். அடிவாங்கி - பின்னேறினர். சண்டை முடிந்த போது புலிகள் தரப்பில் 06 போராளிகள் வீரச்சாவடைந்திருந்தனர். பகைவன் தரப்பில் இழப்பு 60 ஆக இருந்தது. 200ற்கும் மேல் காயமடைந்திருந்தனர்.

மாங்குளத்தின் மேற்கு முனை விழிப்பாகவும் - பலமாகவும் உள்ளதால் அதன் கிழக்குமுனை தாக்க வாய்ப்பாக இருக்குமென்று படைத்தரப்பு கணிப்பிட்டது. பத்துநாள் இடைவெளியில் – மாசி 24ம் திகதி கிழக்கு முனையான ஒலுமடு மீது – கரிப்பட்ட முறிப்புப் படையினர் பாய்ந்தனர். அரண்காத்த சிறுத்தைகள் ஆக்ரோசமாகப் பதிலடி கொடுத்தனர். 50ற்கும் மேற்பட்ட படையினரை அழித்தனர். அவர்களது 20 உடல்களை சிறுத்தைகள் கைப்பற்றி செஞ்சிலுவையிடம் கொடுத்தனுப்பினர். புலிகள் தரப்பில் 06 போராளிகள் களப்பலியானார்கள்.

மேற்கும் - கிழக்கும் பலமானதாக இருப்பதால் மத்தியபகுதி ஓட்டை - ஒடிசலுடன் ஒட்டுப்போடப்பட்டுக் கிடக்கின்றதா! என படையினர் ஐயப்பட்டனர். பங்குனி 14ம் திகதி அதனையும் பரீட்சித்தனர். மாங்குளம் பிரதான பாதைப்பக்கம் சண்டை வெடித்தது. புலிகளின் போ- வன் (4: 1) படையணி மையப்பகுதியை காவல் செய்தது. அனுபவத்தை மூலதனமாகக் கொண்ட போ- வன், சிங்களப்படையை அருகே வர அனுமதித்தது - அதன் பின் தாக்கியது. போ-வன் விரித்த தந்திரோபாய வலைக்குள் பரீட்சிக்க வந்த பகையணி சிக்கிக்கொண்டது. நன்றாக வாங்கிக் கட்டியது. சகபாடிகளின் உடல்களையும் - ஆயுதங்களையும் விட்டுவிட்டு சிங்களப்படை ஓட்டமெடுத்தது. 15 துப்பாக்கிகளையும் - பகைவனின் ஐந்து உடல்களையும் போ- வன் படையணி கைப்பற்றியது. ஏறக்குறைய 30 படையினர் இந்தச் சண்டையில் கொல்லப்பட்டனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயப்பட்டனர். புலிகளின் மத்தியபகுதிக் காப்பரண்கள் அசுங்காமல் - குலுங்காமல் அப்படியே நின்றன.

இதேசமயம், மாங்குளம் புலிகளின் தளம்மீது நடாத்தப்படுகின்ற தாக்குதல்களை வழிநடத்திக்கொண்டிருந்த 55ம் டிவிசனின் கட்டளைப்பீடம் இதேநாளில் புலிகளது எறிகணைத் தாக்குதலால் கலங்கிவிட்டது. புலிகளின் பீரங்கிப்படையணி ஏவிவிட்ட எறிகணைகள் பகைவனது கட்டளைப் பீடத்தைத்தாக்கி முதல்நிலைக் கட்டளை அதிகாரியான பிரிகேடியர் சரத்பொன்சேகரவையும் – இரண்டாம் நிலைக் கட்டளை அதிகாரியான பிரிகேடியர் வோருன் என்பவரையும் உடற்சேதத்திற்குள்ளாக்கி - களத்தை விட்டு அப்புறப்படுத்தியது. இந்த எறிகணைத் தாக்குதலில் சிங்களப்படைகளின் ஆட்டிலறி கொமாண்டரான கேணல் நிலை அதிகாரி ஒருவரும் கொல்லப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

மாங்குளம் தளத்தின் உறுதி படைத்தலைமையை வாட்டியது. சிங்களத் தளபதிகள் கூடிக்கதைத்து - அடுத்து என்ன செய்யலாம் என்று ஆலோசனை கலந்தனர். ஏதோ செய்து – எப்படியாவது மாங்குளத்தின் முன்னரங்கை உடைக்க திட்டம் தீட்டினர். நேரடிச் சூடு போல புலிகளின் பீரங்கிப் படையணி வழங்கும் நேரடியற்ற சூடுகளுக்குத் தற்காத்தபடி எப்படி முன்னேறுவது! உருக்குக் கவசம் உடுத்திய பனைமரம் போல உறுதியாக நிற்கும் புலிகளின் அரண்காவலர்களை எப்படித் தாக்கி வெற்றி கொள்வது! என வரைபடத்தை விரித்து வைத்து சிங்களத்தளபதிகள் சிந்தித்தனர். புலிகளின் ஒலுமடு அரண்களுக்கு முன்னேயிருந்த நீண்ட வெளியையும் - தங்களது கவசப்படையையும் ஒன்றிணைத்து திட்டம் வகுத்தனர். சிங்களத்தின் இராணுவ வரலாற்றில் முதல்தடவையாக அது ஒரு மாபெரும் ராங்குத் தாக்குதலுக்கு தயாரானது. தாக்குதல திட்டத்தின் நேர்த்தி படைத்தளபதிகளை



ஒலுமடுச் சமரரங்கில் ஒரு காட்சி: புலிகளின் முன்னரங்கில் வந்து முட்டிய சிங்களத்தின் ராங்க் மூண்டெரிகிறது.



www.eelamview.com

www.eelamview.com



உற்சாகப்படுத்தியது. தாக்குதல் வெற்றி பெறும் என்று அது நம்பியது. அந்த வெற்றியை உடனடியாகப் பயன்படுத்தி மாங்குளம் சந்திவரை ஒரு வேக நகர்வைச் செய்யவும் சிங்களப்படை திட்டமிட்டது. இதற்காக மும்முனைத் தாக்குதல் திட்டத்தை முறைப்படி வரைந்தது. இதில் ஒரு முனையை திசை திருப்பல் தாக்குதலுக்காக ஒதுக்கியது.

ஓலுமடுவை ராங்க் படையணி தாக்கி - நிர்மூலமாக்கிக் கைப்பற்றும் போதே - பலமான இன்னொரு அணி கனகராயன் ஆறு வழியே நகர்ந்து, மாங்குளம் – ஒலுமடு வீதியில் உள்ள கனகராயன் ஆற்றுப் பாலத்தைக் கைப்பற்றி – அங்கிருந்து மாங்குளம் சந்தியை நோக்கி நகர்வது திட்டம். இந்தத் திட்டத்திற்கு பலம் சேர்ப்பதற்காக மூன்று முறிப்பு முனையில் ஒரு திசைதிருப்பல் தாக்குதலைத் தொடுக்கவும் திட்டமிட்டது. ஜயசிக்குறுய் ஒரு வருடம் பூர்த்தியாகும் வேளையில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வெற்றியை இந்த மும்முனைத்தாக்குதல் பெற்றுத்தரும் என்று படைத்தலைமை நம்பியது.

சித்திரை 20ம் நாள் அதிகாலை சண்டைமுனையை எதிரியின் பீரங்கிப்படைகள் திறந்துவைத்தன. ஒலுமடு காவல் அரண்களுக்கு முன்னால் உள்ள வெளிப்பகுதியில் பகைவனின் ராங்குகள் அணிவகுத்து நின்றன. சுமார் வந்துவிட்டது. முன்னரங்கை சோதியா படையணியும் - சாள்ஸ் அன்ரனி படையணியும் – சிறுத்தைப்படையணியும் காவல் காத்தன. இவற்றுடன் விக்டர் கவச எதிர்ப்புப் பிரிவும் கேணல் கிட்டு பீரங்கிப் படைப்பிரிவும் இணைந்து ராங்குப் படையணியின் நகர்வு மீது பதில் தாக்குதலை மேற்கொண்டன. ராங்குத் தாக்குதல்- எறிகணை வீச்சுக்கள் – உலங்கு வானூர்தித் தாக்குதல்கள் என்பவற்றால் முன்னரங்கம் புழுதி மண்டலமானது. கைக்கெட்டிய தூரத்தையே கண்களால் பார்க்க முடியாத அளவிற்கு தூசிமழை சமரரங்கை விழுங்கியது. தூசித்திரையை வாய்ப்பாகக் கொண்டு ராங்குப் படை ஒரு வேக நகர்வை, அரண்களை நோக்கி எடுத்தது. சில ராங்குகள் முன்னரங்கைத் தொட்டும் விட்டன. ராங்குத் தாக்குதல்களில் அரண்கள் சிதைந்தன. மரங்கள் தலைவிரிகோலமாகின. ஆயினும் அரண்களுக்குள் இருந்த புலிவீரர்கள் நிலைகளைவிட்டு அகலவில்லை. உறுதி குலையாது எதிரியைத் தாக்கினர். முன்னரங்க வாசலிலே வைத்து ஒரு துருப்புக்காவியையும் - ஒரு ராங்கையும் புலிகள் அழித்தனர். இன்னொரு ரி 55 ரக ராங்க் சற்றுத் தூரத்திலேயே அழிக்கப்பட்டது. மேலும் சில கவசங்கள் குண்டடிவாங்கிக் காயப்பட்டன. முயற்சியைத் தொடர படையினர்க்கு முடியாமல் போய்விட்டது. தாக்குதல்கள்

> **......உலங்கு வானூர்தி தாக்குதல் என்பவற்றால் முன்னரங்கம் புழுதி மண்டலமானது. கைக்கெட்டிய தூரத்தையே கண்களால் பார்க்க முடியாத அளவிற்கு தூசிமழை சமரரங்கை விழுங்கியது. தூசித்திரையை வாய்ப்பாகக் கொண்டு ராங்குப் படைகள் ஒரு வேக நகர்வை, அரண்களை நோக்கி எடுத்தன. சில ராங்குகள் முன்னரங்கைத் தொட்டும் விட்டன: ராங்குத் தாக்குதல்களில் அரண்கள் சிதைந்தன. மரங்கள் தலைவிரிகோலமாகின. ஆயினும் அரண்களுக்குள் இருந்த புலிவீரர்கள் நிலைகளைவிட்டு அகலவில்லை. உறுதி குலையாது எதிரியைத் தாக்கினர்.**

20 கவசங்கள் அந்த கவசப்போர் அணியில் இடம்பெற்றிருந்தன. ரி 55ரக தாக்குதல் ராங்குகளும் மற்றும் துருப்புக்காவிகளும் இதில் இருந்தன. புலிகளின் முன்னரங்கத்தை குண்டுகளால் துவம்சம் செய்து தள்ளிவிட்டு - உருக்குலைந்த புலி அரணுக்குள் துருப்புக்காவிகள் மூலம் படையினரைக் கொண்டு சென்று இறக்கி - அரண்களைக் கைப்பற்றுவது திட்டம். ஒரு துருப்புக்காவி 10 படைவீரர்களை ஒரு தடவையில் பொத்தி மூடிக் காவிச்செல்லும்.

துருப்புக்காவிகளில் சென்று இறங்கும் குறைந்த தொகையுடைய சிறப்பு அணியினர் சிதைந்த அரண்களை ஒரு சில நிமிட நேரங்களுக்கு பிடித்து வைத்திருக்க எதிரித்தளத்தில் தயாராக நிற்கும் காலாட்படையினர் விரைந்து வந்து நிலம் பிடித்து - ஒலுமடு தளத்தைக் கைப்பற்ற வேண்டும்.

அந்த வெட்டவெளிப்பகுதியில் ஒரு குறிப்பிட்டளவு தூரம் முன்னேறி வருவதும் – பின்னர் நிலையெடுத்து – ராங்குகளை வரிசைப்படுத்தி, முன்னரங்கைத் தாக்குவதும் பின்னர் – மேலும் முன்னேறி ஒரு குறித்தளவு தூரம் வந்து மீண்டும் நிலையெடுத்து – வரிசைப்படுத்தி முன்னரங்கத்தைத் தாக்குவதுமாக ராங்குப் படையணியின் தாக்குதல் தந்திரோபாயம் இருந்தது.

பகைவனின் கவசப் போர் அணியை புலிகளும் தூரவைத்தே தாக்கத் தொடங்கினர். தாக்குதலைச் சமாளித்தபடி ராங்குகள் முன்னேறின. சண்டை இப்போது முன்னரங்கத்தின் துப்பாக்கி வீச்செல்லைத் தூரத்திற்குள் முறியடிக்கப்பட்ட நிலையில் புறப்பட்ட நிலைக்கே ராங்குப்படையணி திரும்பிச் சென்றது. சிங்கள இராணுவத்தின் வரலாற்றில் முதற்தடவையாக நடாத்தப்பட்ட ராங்க் வியூகத் தாக்குதல், அதற்கு தோல்வியில் முடிந்தது.

இதேவேளை, கனகராயன் ஆற்றுக்கரையால் நகர்ந்து பாலத்தைப் பிடித்து – மாங்குளத்தின் கிழக்குவாசலை எட்டி மிதிக்க ஆசைகொண்ட படையணியினரை ஜெயந்தன் படையணி வழிமறித்துத் தாக்கியது. பழமை மிகுந்த அந்த பிரிட்டிஸ் கால உருக்குப் பாலத்திற்கு வரமுன்னரே பகைவனின் நகர்வு நிறுத்தப்பட்டு திருப்பியனுப்பப்பட்டது. ஒலுமடு–கனகராயன் ஆற்றுப் பாலம் ஆகியவற்றைக் கைப்பற்றும் நோக்கம் கொண்ட இரண்டு தாக்குதல்களும் தோல்வியில் முடிந்தன. மூன்றுமுறிப்புச் சந்தி முனை மீது மேற்கொள்ளப்பட்ட திசை திருப்பல் தாக்குதலை அன்பரசி படையணி சுலபமாக எதிர்கொண்டு விரட்டியடித்தது.

மாங்குளத்திற்காக நடந்த இந்த நான்கு சண்டைகளுடன் ஜயசிக்குறுய் ஒருவருட பூர்த்தியை அடைந்தது. ஒருவருட பூர்த்தி நாளான மே 13, 1998– ஜயசிக்குறுய் களமுனை அமைதியாகவே கிடந்தது. ஆனால், வன்னி வாழ் மக்கள் வீதிகளில் குழுமி நின்று வெற்றிகரமாக நடந்த ஒருவருடச்சமரை, எழுச்சியுடன் கொண்டாடிக் கொண்டிருந்தனர். ஜயசிக்குறுய் இரண்டாவது வருடத்தள் நுழைந்துள்ளது. ○

## ஜயசிக்குறுய் படையினருக்கு இந்த மண்ணின் மைந்தரிடமிருந்து ஒரு மடல்....

இந்த வெசாக்கல்ல, எந்த வெசாக்கிலும் உங்கள் எண்ணம் ஈடேறுவது அவ்வளவு சுலபமானதல்ல என்பதை வன்னிக்களம் இதுவரையில் உங்களுக்கு நன்கு உணர்த்தியிருக்கும் என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை.

30.000 படைகள், வானூர்திகள், ஆட்டிலறிகள், கவசங்கள், கனரகங்கள்.. ஆனாலும் மூன்றே மாதத்தில் முடிந்து விடும் என்று கூறி முடுக்கிவிடப்பட்ட ஜயசிக்குறுய், 365 நாட்களைக் கடந்த நிலையிலும் முடங்கிப்போய் கிடக்கிறது. ஆனால், விரைவாக உயர்ந்து கொண்டு போவதோ உங்களில் உயிரிழந்தோர், ஊனமானோர், காணாமற் போனோர் பட்டியல் தான்.

நீங்கள் கொல்லப்படுவது பற்றியோ, ஊனமாக்கப்படுவது பற்றியோ, காணாமற்போவது பற்றியோ உங்கள் இராணுவ. அரசியல் தலைமைகள் இதுவரை கவலைப்பட்டதுமில்லை. இனியும் கவலைப்படப் போவதுமில்லை. அவர்களின் தேவையெல்லாம், பதக்கங்களும் பதவிகளுமே.

மூன்றே மாதம் எனக்கூறி, பின் வெசாக்கென்று மாற்றி, புத்தாண்டு என்று இடித்துரைத்து, இறுதியில் இப்பொழுது எப்போதாவது என்று கூறுகிறார் ரத்வத்த. சென்ற புத்தாண்டில், வெசாக்கில் உங்கள் அருகில் நின்ற எத்தனை தோழர்கள் இன்று உயிருடன் இல்லை. அடுத்த வெசாக்கிற்கு நீங்கள் இருப்பீர்களா? இங்கு தொடர்ந்திருந்தால் நிச்சயம் இருக்கமாட்டீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும்.

சிறிலங்கா பாராளுமன்றத்தில் சொகுசு நாற்காலிகளில் அமர்ந்து கொண்டு, கூக்குரலிட்டுக்கொண்டிருக்கும் அரசியல்வாதிகளின் பிள்ளைகள் யாராவது உங்கள் பக்கத்துக் காப்பரணில் நிற்கிறார்களா? ஒருவர்கூட இல்லை. கடல் கடந்த நாடுகளில் அவர்கள் கல்வி கற்றுக்கொண்டிருப்பார்கள். இங்கு உங்கள் நிலையை சற்று எண்ணிப்பாருங்கள். ஒழுங்கான உணவின்றி, நீரின்றி, தலையில் குண்டேந்தி, எறிகணையால் உடல்சிதறி, கண்ணிகளால் காலிழந்து போய் நிற்கிறீர்கள்.

துப்பாக்கி வேட்டொலியே கேட்காத தொலைவில் குளிரூட்டப்பட்ட வாகனங்களில் இருந்து கொண்டு, கட்டளையிடும் உங்கள் அதிகாரிகளின் பெயர்கள் பதவி உயர்விற்காகவும், பதக்கங்களுக்காகவும் சிபார்சு செய்யப்பட, உங்கள் பெயர்களோ, காணாமல் போனோர் பட்டியலில் பதியப்பட்டுக்கொண்டு போகிறது.

எத்தனை முறை உங்கள் இராணுவத்தலைமைகளையும் தந்திரோபாயங்களையும் மாற்றிப்பார்த்தாகி விட்டது. ஆனாலும் உங்கள் மரணங்களே மலிவாகக்கிடைக்கின்றன. அசோக ஜெயவர்த்தனா அட்டகாசமாகத்தான் வந்தார். அழிந்துபோகிறது இராணுவம் என்றார்கள். அவர் அனுப்பப்பட்டார். சிறிலால் வீரசூரிய வந்தார். சிறந்த தளபதி என்றார்கள். சிதைந்துபோனது மன்னகுளமண்ணில் உங்கள் சிறப்புப் படைகள்.

நீங்கள் எதற்காகப் படைகளில் சேர்ந்தீர்கள் என்பதைச் சற்று எண்ணிப்பாருங்கள். உங்கள் ஏழைக்குடும்பங்களை வாழவைக்க, உங்கள் நோயாளித்தாயைக் காப்பாற்ற, உங்கள் சகோதரிகளை மணம் முடித்துவைக்க: இவை உங்கள் கடிதங்கள் கூறும் கண்ணீர் கதைகள்தான். ஆனால், இங்கு நடப்பது என்ன? உங்களை நேசிப்பவர்கள் உங்களைக்காணாமல் உருகிக்கொண்டிருக்க எங்கோ ஒரு மூலையில் உங்கள் சிதைந்த உடல்கள் உருக்குலைந்து கொண்டிருக்கும்.

உயிரிழந்தோர், ஊனமுற்றோர், காயமடைந்தோர், கடமைக்குத் திரும்பாதோர் என உங்கள் படையணிகள் சுருங்கிக்கொண்டுவர, இங்கு என்றுமே இல்லாதவாறு மீழ இணைவோர், புதிதாய்ச் சேர்வோர் என்பனவற்றால் எமது படையணிகள் பலம் பெறுகின்றன. அள்ளி எடுத்தவை, அழித்தொழித்தவை மூலம் உங்கள் ஆயுதபலம் கேள்விக்குறியாய் நிற்க, அள்ளப்பட்ட ஆயுதங்கள் இறக்கப்பட்ட போர்க்கலங்கள் என எமது ஆயுதபலம் ஒரு உன்னத நிலையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. கடல் கடந்து எம்மை நோக்கி நீளும் நேசக்கரங்களும், எல்லாவற்றிற்கும் மேலாக எமது மக்களின் இணையில்லாப் பேராதரவும் எம்முள் ஒரு புதிய சக்தியை ஊட்டி நிற்கின்றன.

தாண்டிக்குளம் தகர்க்கப்பட்டபோதும், கரப்புக்குத்தி – விஞ்ஞானகுலம் அள்ளப்பட்டபோதும், மன்னகுளத்தில் நீங்கள் மண்ணோடு மண்ணாக்கப்பட்டபோதும், மூன்றுமுறிப்பில், மாங்குளத்தில் என நீங்கள் மாறிமாறி வாங்கிக்கட்டிக் கொண்டபோதும், ஒலுமடுவில் நீங்கள் ஓட ஓட விரட்டப் பட்டபோதும், இறுதியாய் மும்முனைச் சமரில் உங்கள் ராங்குப்படைகள் தவிடுபொடியாக்கப்பட்டபோதும், ஆகாய விமானங்களுக்கோ. ஆட்லறிகளுக்கோ, உங்கள் அவலக்குரல் கேட்கவில்லை. அனுருத்தவோ, கருவத்தவோ உதவிக்கு ஓடிவரவில்லையே. இன்னும் எதை நம்பி நிற்கிறீர்கள்?

நீங்கள் யாருக்காகப் போராடுகிறீர்கள்? உங்கள் பெற்றோர்களுக்காகவா? பிள்ளைகளுக்காகவா? மனைவிக்காகவா? காதலிக்காகவா? நீங்கள் அனுப்பும் ஒரு சில ஆயிரம் ரூபாக்களை விட அவர்கள் உங்களையே அதிகம் நேசிப்பார்கள். நியாயமற்ற ஒரு யுத்தத்தில் அநியாயமாகப் பலியாவதை விட, உங்கள் இனிய உறவுகளுடன் மகிழ்ச்சியாய் வாழ முடிவு செய்யுங்கள்.

நாம் காலியிலோ அல்லது மாத்தறையிலோ அல்லது குருநாகலிலோ இருக்கும் உங்கள் வீட்டு முற்றத்திற்காகப் போராடவில்லை. எமது மூதாதையர் மண்ணில் இனவாத ஆக்கிரமிப்பை எதிர்த்தே போரிடுகிறோம். இந்த மண் எமது சொந்தமண். எமது பெற்றோர், அவர்களின் பெற்றோர், அவர்களின் பெற்றோர் என வழிவழியாய் பிறந்து, தவழ்ந்து, வளர்ந்து, வாழ்ந்தமண் இன்று நாமும், எமது பிள்ளைகளும் வாழப்போகும் மண். இறுதியாக உங்களுக்கு ஒன்றைச் சொல்லிவைக்க விரும்புகின்றோம்.

இது எமது வாழ்விற்கான போராட்டம். இது எமது வரலாற்றுக் கடமை. இங்கு நாம் சந்திக்கும் சாவு ஒரு சரித்திரம். இந்தமண் எங்கள் உணர்வுடன், உயிருடன் ஒன்றிப்போனது. இந்த மண்ணின் ஒவ்வொரு அங்குல நிலத்திற்காகவும் மிக மூர்க்கமாகப் போராடுவோம். எந்த ஆக்கிரமிப்பாளனையும் எம்மண்ணில் நிலைத்திருக்க விடமாட்டோம். அனைவரையும் கொன்றொழிப்போம். ○

**" வெற்றி நிச்சயம் உங்களுக்கல்ல எங்களுக்கு "**



www.eelamview.com

# இது எத்தனையாவது அதிசயம்?

வே. பாலகுமாரன்

இந்த ஓராண்டுகால ஜயசிக்குறுய் வரலாற்றினை திரும்பிப் பார்க்கும் எவருக்கும் தாங்க முடியாத பிரமிப்பே ஏற்படும்; நம்ப முடியவில்லையே என வாய்விட்டு கூற நேரிடும்; இது எத்தனையாவது அதிசயம் என்கிற கேள்வியே மேலெழும்; ஒரு வருடத்திற்குள் இத்தனை சாதனைகளா? இத்தனை மாற்றங்களா? இத்தனை தாக்கமா? எனவேதான் சிங்கள இராணுவம் வெல்லவேண்டும் என்பதற்காக இலவச ஆலோசனைகள் வழங்கும் இக்பால் அத்தாஸ் கூட எழுதுகிறார்: "எல்லா முட்டைகளும் ஒரே கூடைக்குள்." வவுனியாவிலிருந்து மாணிக்கவாசகர் எழுதுகிறார்: "புலிக்குகைக்குள் ஜயசிக்குறுய்." கூடை கவிழ்ந்தால்? குகை வாயில் மூடப்பட்டால்? இக் கேள்விகளை நாம் எழுப்பவில்லை; சிங்களவர்களே எழுப்புகின்றார்கள். ஏனெனில் 20 ஆம் நூற்றாண்டின் வெற்றிகரமான போருத்திகளான, மிகக் கூடிய படையினரையும் நவீன கனரக ஆயுத தளபாடங்களையும் மிகச் செறிவாகப் பயன்படுத்தியும் எதிர்பார்த்த வெற்றி இன்னமும் கிடைக்கவில்லையே. 1983 ஆம் ஆண்டு பன்னிரண்டாயிரமாய் இருந்த இராணுவத்தினை இன்று ஒரு இலட்சத்து முப்பதாயிரம் ஆக்கினோம்; இராணுவ தளபாடங்கள் வேண்டி மலைபோல் குவித்தோம்; 50 கோடி ரூபாய் செலவழித்த காலம் போய் இன்று 500 கோடி செலவழிக்கின்றோம்; என்ன பயன்? இராணுவத்தை விட்டு ஓடுவோர் தொகை 25 ஆயிரமாகி விட்டது. 7 தடவை பொது மன்னிப்புக் கொடுத்தும் இறுதியில் சந்திரிகா அம்மையாரே மன்றாடி கெஞ்சியும் பலனில்லையே. மொத்தத் தொகையில் 15 விழுக்காட்டிற்கு மேல் ஓடிய இராணுவம். இதுவொரு உலக சாதனை. மொத்தச்செலவு என்றாலும் சரி, மொத்தத் தேசிய உற்பத்தி என்றாலும் சரி, போருக்கான செலவு விழுக்காடு எல்லா வரையறைகளையும் தாண்டி உயர்கின்றது. உலகில் குடித்தொகைக்கு மிக அடர்த்தியான இராணுவம் சிறிலங்காவில் தான் என்பதும் மற்றொரு சாதனை. இத்தனை சாதனைகள் படைத்தும் போர்க்களத்தில் சாதனை படைக்க முடியவில்லையே? ஏன்? ஏன்? இனி என்ன செய்யவேண்டும்? சிங்களம் தடுமாறுகின்றது.

இம் முடிச்சை சிங்களத்தால் என்றுமே அவிழ்க்க முடியாது என்கின்றார் முன்னாள் விமானப் படை உயரதிகாரியான விங் கொமாண்டர் மார்க் செனிவிரத்னா. ஏனென்று அவரே விளக்குகின்றார்: "சூதாட்ட விடுதியொன்றில் சூதாடித் தோற்பவன், வெல்ல வேண்டும் என்பதற்காக மாற்றி, மாற்றி பல வழிகளையும், முறைகளையும் கையாண்டு, இம் முறை வெற்றி நிச்சயம் என நம்புவான். அதுபோலத்தான் சிங்கள இராணுவமும் இப்போது அதி நவீன போர்க் கருவிகளைக் கொள்வனவு செய்து பயன்படுத்த முயல்கின்றது. இறுதியில் இருவருமே தோல்வியைத் தழுவுவார்கள். சூதாடுபவன் தோற்றால், அவனது குடும்பம் மட்டுமே பாதிப்படையும். ஆனால் சிங்கள இராணுவத்தைப் பொறுத்தவரையில் நாட்டின் பொருண்மியமே நாசமடைந்துவிடும். புலிகளின் போருத்திகளை, வழிமுறைகளை இன்னதென்று வகைப்படுத்த முடியாது. அவர்களின் சமர்க்களத்திற்கு இந்த நவீன கருவிகள் பயனற்றவை." இது செனிவிரத்னாவின் கருத்து. எமது கருத்து என்ன? ஜயசிக்குறுய் சமர்க்களத்தில் என்ன நேரத்தில் எது நடக்கும் என இவர்களால் எதிர்வுகூற முடியாது. ஏனெனில் விடியப்போகும் தேசமொன்றின் முடியப்போகும் இன்னல்களின் முடிவின் தொடக்கமே இச்சமர்க்களம். எனவே அதிநவீன தொழில்நுட்ப கருவிகளை சிங்களம் வேண்டினாலும் என்ன நடக்கும்? அதிலொரு பகுதி புலிகளுக்குச் சேர



"புலிக்குகைக்குள் ஜயசிக்குறுய்" - குகைவாயில் மூடப்பட்டால்

தோடு, கரந்துறைப் போரியல் அறிஞரான சேர் றொபேர்ட் தோம்சன் குறிப்பிட்டது போலவே "அந்நவீன போர் முறைமைக் கருவிகளைப் பயன்படுத்த முற்படும் நாடு இறுதியில் வங்குரோத்து நிலையையே அடையும்."

ஜயசிக்குறுயில் புலிகளை ஒருபோதும் வெல்லமுடியாது என்பதற்கும் இப்போது சிங்களவர்களே விளக்கமும் தருகின்ற வித்தையும் இப்போது நடக்கின்றது. அம்மையாரின் அந்தரங்க ஆலோசகரில் ஒருவரும், முன்னாள் ஜே. வி. பி. புரட்சிக்காரரும், இன்னாள் அரசியல் ஆய்வாளருமான ஜெயதேவ உயன்கொட துணையாசிரியராக இயக்கும் "பிராவ்தா" சமூக அறிவியல் ஏடு கூறுவது இதுதான்: "ஜயசிக்குறுயின் அடிப்படையே தவறான இலக்குகளை கொண்டது. ஜயசிக்குறுய், புலிகளுக்கு எதிராக ஓரிரண்டு சமர்களை வெல்வதற்காக தொடங்கப்பட்டதல்ல. ஒரு முழுமையான போரில் புலிகளை முற்றிலுமாக வீழ்த்த வேண்டும் என்பதே நோக்கம். இது இப்போது தெற்கில வெறும் வெற்றி மாயையொன்றை உருவாக்கி, முழுப் பொய்களைச் சொல்பவர்களே தாம் சொல்வதை தாமே நம்பும் ஆபத்தான நிலையை உருவாக்கிவிட்டது. எத்தனை வாக்குறுதிகள்? எத்தனை காலக்கெடுக்கள்? எத்தனை அறிக்கைகள்? ஆனால் பிரபாகரனைப் பார்த்தால், அன்றிலிருந்து இன்றுவரை போரை தமிழர் தரப்பில் நடத்துபவர் அவர். வெற்றி, தோல்வி பற்றி இதுவரை ஏதும் அவர் பேசியிருக்கின்றாரா? உண்மையிலே இப்போரின் உண்மை நிலையை அவரே அறிவார். இப்போரை அவரே முழுமையாகப் புரிந்து கொண்டுள்ளார். ஒரு தேசிய விடுதலை இயக்கத்தின் உள் அசைவியக்கத்தை ஒரு அரசினுடைய இராணுவத் தரப்பால் ஒருபோதும் புரியமுடியாது. புரிந்ததும் கிடையாது. எனவேதான் புலிகள் அழிந்துபடப் போகின்றார்கள் என சிங்களத் தரப்பு இப்போது நம்பும்போது, நடக்கப்போவது அதற்கு எதிர்மாறாகவே இருக்கப்போகின்றது." இவ்வாறு நீள்கின்றது இவ்வாய்வு.

ஜயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையின் பலவீனங்களை, பாரிய தவறுகளை, எதிர்கால ஆபத்துக்கள் எல்லாம் எதிர்த் தரப்பினைச் சேர்ந்தவர்களாலேயே எவ்வளவு தெளிவாகப் புரியப்பட்டிருக்கின்றன. இதற்கு யார் காரணம்? இந்த அரசியல் ஞானத்தை இவர்களுக்கு புகட்டியவர் யார்? இன்றல்ல, நேற்றல்ல 25 வருடங்களுக்கு முன்னரே தலைவர் அவர்கள் எடுத்த முடிவே இதற்குக் காரணம். என்றோ ஒரு நாள் தனது பேரினவாத அழிப்புச் செயற்பாட்டை, சிங்களம், மண்பறிப்பு, இனவழிப்பு, அரசியல் ஏமாற்றுத் தந்திரங்கள் என்பவற்றிலிருந்து பெரும் போராக மாற்றும். அதற்கு முகம் கொடுக்க வேண்டி நேரிடும் என்பதைத் தலைவர் தெளிவாக அறிந்து வைத்திருந்தார். "போர் என்பது அரசியலின் தொடர்ச்சியே. இந்த வகையில் போர் என்பதும் அரசியலே; ஒரு அரசியல் நடவடிக்கையே." இது மாவோவின் கூற்று. போர் என்பது ஒரு நாட்டின் தலைவிதியை தீர்மானிப்பது. வாழ்வையும் சாவையும் தீர்மானிக்கும் இடம். அழிவிற்கு அல்லது ஆக்கத்திற்கான பாதை." இது சன்சூவின் கூற்று. "இது தமிழருக்கு எதிரான போர். தமிழின அழிப்பை இலக்காகக் கொண்டபோர். இந்த இனப்போர் நீண்ட நெடுங்காலமாகவே நடந்து வருகின்றது. புலிகள் இயக்கத்தின் பிறப்பிற்கு முன்னிருந்தே நடந்து வருகின்றது. ... எனவே நாம் எமது படைபலத்தைப் பெருக்கி போராட்டத்தை தீவிரமாக்கவேண்டும். தமிழ் மக்கள் தமது அரசியற் தலைவிதியை தாமே நிர்ணயிப்பதற்கான படை பலம் பெருகவேண்டும்" என்கின்றார் எம் தலைவர்.

20 ஆம் நூற்றாண்டின் முடிவிலே விடிவைத் தேடும் மக்களுக்கு விடிவெள்ளியாக புதிய பாதை காண்பிக்கும் தலைவர், இந் நிலையை அடைய எத்தனை தடைகளைத் தாண்டினார்? எத்தனை போருத்திகளை, அரசியல் இராசதந்திர வித்தைகளைப் பயன்படுத்தினார்? மிகப் பலவீனமாக இருந்த நிலையில் மிகப் பொருத்தமான கரந்துறைப் போரியல் முறையை அவர் கைக்கொண்டார். கரந்துறைப் போர் முறையின் அதிஉயர்ப்பான "இயங்கு நிலைப் போர்முறையை" (Mobile Warfare) அவர் வகுத்துக் கொண்டார். கரந்துறைப் போர் முறையை அதன் உச்சநிலைக்கு விரிவாக்கிய பின், பொருத்தமான நிலைமைகளின் கீழ், தனது படைபலத்தைப் பொறுத்தும் அதனை இன்னொரு கட்டத்திற்கு நகர்த்தி- மரபுவழி போரியல் படையணியின் நுட்பங்களைக் கைக்கொள்ளும் படையாக தமிழர்சேனை மாறமடைய வேண்டும் என விரும்பினார். இதற்காக அவர் எத்தனை போரியல் வரலாறு வழிகளுக் கூடாக பயணம் செய்தார்? காலத்தை இழுத்தடிப்பது தமிழருக்கே பெரும் ஆபத்தாக முடியும் என்பதால் எப்போதுமே அரசியல், இராணுவ முடிவுகளை "விரைந்து" எடுத்தார். சமருக்தியாக "சிலரை பலராலும்", போருத்தியாக "பலரை சிலராலும்" முறியடித்தார். யுத்த தந்திரமாக "பின் வாங்கியதன் மூலம்" எதிரியை ஆழமாக உள்நுழைய ஆசை காட்டி- தனது சொந்தப் பலத்தைப் பேணி- பொருத்தமான நேரமொன்றிற்கு காத்திருந்தார். அதற்கான கால அவகாசத்தை பெற்றுக் கொண்டார். தேவையான நேரத்தில் படைகளை இணைத்தும், "எப்போதும் வேக அசைவியக்கப் போர் முறைமையை" கைக்கொண்டும், எதிரியிடமிருந்தே தனக்குத் தேவையான விநியோகத்தினைப் பெறுவதற்காக "எதிரியின் தளத்தை, மனித ஆற்றலை முற்றாக அழிக்கும் யுத்தமுறையிலும்" ஈடுபட்டு - இன்று இவற்றின் பயனாக எதனைச் சாதித்தார்? எதையிழந்தாலும் புலிகளின் போரிடும் ஆற்றலை இழக்காது- அதனை தக்கவைத்து விரிவாக்கியும், ஜயசிக்குறுய் சர்வதேச புலியழிப்பு போர் மூலோபாயத்தை முறறாகச் சிதைத்தும். அடுத்து பிரபாகரன் என்ன செய்வார் என எவருமறியாத அளவிற்கு இரகசியம் பேணியும், இன்று புதுமையும் பழமையும் கலந்த புதிய விடுதலைப் போரியல் முறைமையை, அரசியற் சிந்தனை முறைமையை அல்லவா அவர் தோற்றுவித்திருக்கின்றார்!

மரபுவழி இராணுவத்திற்குரிய அதிகளவு ஆட்பலமோ கனரக ஆயுதங்களோ ஒப்பீட்டளவில் மிகக் குறைவு. வியட்னாம், சீனா போல பாரிய மலைத்தொடர்களோ, நீண்ட ஆறுகளோ, பரவலாக பள்ளத்தாக்குகளோ, ரஸ்யா போல பனிமழைக்காலமோ, பனிமலைகளோ இல்லை. ஏன் என்று கேட்க நட்பு நாடுகள் எதுவுமில்லை. அப்படியானால் எப்படி? 20ம் நூற்றாண்டில் உலகம் காணாத புலிகளின் வீரப்பண்பு; மக்களுக்காக உயிரையே-உடலையே ஆயுதமாக்கும் கரும்புலிகளின் உன்னத ஈகம்; எண்ணற்ற இடர்களைத் தாங்கி, இன்னமும் எம்முடன் வாழும் எம் மக்களின் மனவுறுதி; அப்பழுக்கற்ற தலைவனின் ஆளுமை; இதில் எது காரணம்? எது காரணமானாலும் என்ன எம் மக்களே! அதை அறிந்தவர்களும் நாமல்லவா? எனவே,

ஜயசிக்குறுய் சமர்க்களத்தை வாழ்த்துவோம். நாமும் வாழ்வோம்.





www.eelamview.com

www.eelamview.com



# 'ஜயசிக்குறுய்' ஓராண்டு நிறைவுகுறித்து தேசியத்தலைவரின் சிறப்புச்செய்தி

எமது தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில் இன்றையநாள் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நாள். எமது எதிரியான சிறிலங்கா அரசின் மிகப் பெரிய படையெடுப்பான 'ஜயசிக்குறுய்' இராணுவ நடவடிக்கையை நாம் எதிர்த்து நின்று போராடி, இன்றுடன் ஒரு ஆண்டு பூர்த்தியாகிறது. மூன்றுமாத காலத்திற்குள் முடிந்துவிடுமென பேரார்ப்பாட்டத்துடன் பெரும் பிரச்சார எடுப்புடன் ஆரம்பமான இப் போர் நடவடிக்கை இன்றுடன் ஒரு வருடமாகியும் இன்னும் முடிவு பெறாது இழுபடுகிறது. ஒரு வருட காலத்தை எட்டிவிட்ட ஒரு தனிச் சமர் என்ற ரீதியில், தமிழீழப் போராட்ட வரலாற்றில் மட்டுமன்றி உலகப் போரியல் வரலாற்றிலும் மிகவும் நீண்டதொரு சமராக இது முக்கியத்துவம் பெறுகிறது. எதிரியின் படையெடுப்பை மூர்க்கமாக எதிர்த்துப் போராடி, எதிரி இராணுவத்தின் நகர்வு வேகத்தை தடுத்து நிறுத்தி, எதிரிப்படைகளை வன்னிக் காட்டிற்குள் முடக்கி வைத்து, உலக இராணுவ வரலாற்றில் ஒரு ஒப்பற்ற சாதனையை எமது விடுதலை இயக்கம் நிலைநாட்டியிருக்கிறது.

'ஜயசிக்குறுய்' சமர் சாதாரண சமரல்ல. சமர்களுக்கெல்லாம் தாய்ச்சமராக, எமது மண்ணில் நிகழ்ந்த பெரும் சமர் இது. இந்தச் சமரில் எதிரியானவன் தனது முழுப்பலத்தையும் வளத்தையும் குவித்துப் போரிட்டான். மூன்று பெரும் படைப்பிரிவுகளைச் சேர்ந்த முப்பதாயிரம் இராணுவத்தினரும், விசேட பயிற்சி பெற்ற சிறப்புப் படையணிகளும், பின்னணிப் படைகளாக கடற்படையினரும், காவற்துறையினருமாகப் பாரிய படை பலத்தோடு இந்தச் சமர் நிகழ்ந்தது. கனரக ஆயுத சக்தியாக பெருமளவு பீரங்கிகளும், ராங்குகளும் தரைப்படைக்கு வலுச்சேர்க்க ஆகாயப்படையைச் சேர்ந்த குண்டு வீச்சு விமானங்களும், தாக்குதற் ஹெலிகளும் இந்தச் சமரில் பெரும் பங்கு வகித்தன. ஒரு பகை நாடுமீது ஆக்கிரமிப்புத் தாக்குதலை நடத்துவது போன்று சிங்கள தேசம் தனது படைபல சக்தியை ஒன்றுகுவித்து, தமிழீழத்தின் இதய பூமியான வன்னிமண்மீது படையெடுத்தது.

இந்தப் பெரும் படையெடுப்பின் இராணுவக் குறிக்கோள் என்ன? அரசியல் ரீதியான அந்தரங்க நோக்கம் என்ன?

தமிழரின் போக்குவரத்திற்கு வசதியாக கண்டி நெடுஞ்சாலையைத் திறந்துவிடுவதுதான் 'ஜயசிக்குறுய்'யின் இராணுவ இலக்கென சிங்கள அரசு கூறிவருகிறது. ஆனால் இப்படையெடுப்பின் உண்மையான நோக்கம் அதுவல்ல. 'ஜயசிக்குறுய்' இராணுவ நடவடிக்கையின் பின்னணியில் மிகவும் ஆபத்தான, நாசகாரமான நோக்கங்கள் இருக்கின்றன.

கண்டி நெடுஞ்சாலை வன்னி மாநிலத்தின் இதயத்தை ஊடறுத்துச் செல்கிறது. இந்த நெடுஞ்சாலையைக் கைப்பற்றுவதன் மூலம் வன்னியை இரு கூறுகளாகத் துண்டாடி, தமிழர் தாயகத்தின் புவியியல் ஒருமைப்பாட்டை சிதைத்துவிடலாமென சிங்களப் பேரினவாத அரசு எண்ணியது.

அடுத்ததாக, வன்னிப் பெருநிலப்பரப்பு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேசம் என்பது சிங்கள அரசுக்குத் தெரியும். இங்குதான் விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடமும், பாசறைகளும், நிர்வாக கட்டமைப்புகளும் இருக்கின்றன என்பதும் எதிரிக்குத் தெரியும். எனவே, வன்னியின் இதயம்மீது படையெடுப்பை நடத்தினால் புலிகள் இயக்கம் போருக்கு முகம்கொடுத்தே ஆகவேண்டுமென அரசு எண்ணியது. இச் சூழலில், பாரிய படை பலத்தையும் படைக்கல சக்தியையும் பயன்படுத்தினால் புலிகள் இயக்கத்தின் இராணுவ பலத்தை அழித்து, அதன் மூலம் தமிழரின் தேசிய சுதந்திர இயக்கத்திற்கு முடிவு கட்டிவிடலாமென பேரினவாதிகள் கருதினர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழித்து, வட தமிழீழத்தை தென்னிலங்கையுடன் இணைத்து விட்டால் தமிழரின் தேசிய பிரச்சனை இராணுவ ரீதியில் தீர்வாகிவிடுமென சந்திரிகா அரசு கணக்குப் போட்டது. இந்தத் தந்திரோபாயத்தையே 'சமாதானத்திற்கான போர்' என அரசு பூடகமாகச் சொல்லிவருகிறது.

இத்தகைய நாசகார நோக்குடனேயே 'ஜயசிக்குறுய்' படையெடுப்பு வன்னி மண்மீது தனது ஆக்கிரமிப்புப் பாதங்களைப் பதித்தது.

எதிரியின் இந்தப் படை நடவடிக்கை மிகவும் ஆபத்தான நோக்கத்தைக் கொண்டது என்பதை நாம் ஆரம்பத்திலிருந்தே புரிந்து



கொண்டோம். இது எமது தாயக நிலத்தின் ஒருமைப்பாட்டிற்கு மட்டுமன்றி, எமது விடுதலை இயக்கத்தின் இருப்பிற்குமே மிகப் பெரிய சவாலாகும். எனவே, இப்படையெடுப்பை எமது முழுச் சக்தியையும் பிரயோகித்து மூர்க்கமாக எதிர்ப்பதென நாம் திடசங்கற்பம் பூண்டோம். இந்த உறுதிப்பாட்டின் அடிப்படையில், சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவத்தின் அசைவியக்கத்தைத் தடுத்து நிறுத்தி, எதிரிக்குப் பலமான பதிலடிகள் கொடுக்கும் வகையில் நாம் எமது போர் முறைத் திட்டத்தையும் உத்திகளையும் வகுத்தோம்.

'ஜயசிக்குறுய்' சமர் ஆரம்பமாவதற்கு முன்னர் சிங்கள அரசும், சிங்கள இராணுவத் தலைமையும் எமது இயக்கத்தின் படைபலம் பற்றியும், போராடும் உறுதி பற்றியும் ஒரு தவறான மதிப்பீட்டை வைத்திருந்தன. யாழ்ப்பாணத்திலிருந்து நாம் மேற்கொண்ட தந்திரோபாய பின்நகர்வையும், எடிபல இராணுவ நடவடிக்கைக்கு நாம் எதிர்ப்புத் தெரிவிக்காததையும் அடிப்படையாக வைத்து, புலிகள் இயக்கம் பலவீனம் அடைந்துவிட்டதாக சிங்கள அரசு கருதியது. இந்தத் தவறான கணிப்பீடு காரணமாகவே 'ஜயசிக்குறுய்' இற்கு குறுகிய காலக்கெடுக்களை வகுத்து, இராணுவத் தலைமை தலைகுனிய நேரிட்டது.

'ஜயசிக்குறுய்' இராணுவத்தை எதிர்கொள்ள நாம் தயார்நிலையில் இருந்தோம். பெரும் எடுப்பிலான ஒரு மரபுவழிப் போருக்கு முகம் கொடுக்கும் வகையில் நாம் எமது இராணுவக் கட்டமைப்பைச் சீர்செய்து, ஒழுங்கமைத்து இருந்தோம். முல்லைத்தீவில் கிட்டிய மாபெரும் வெற்றியை அடுத்து, எமது படைக்கல சக்தி பலம் பெற்றிருந்தது. இந்த ஆயுத பலத்தை அடிப்படையாக வைத்து, பீரங்கிப் படையணி, ராங்க் எதிர்ப்புப் படையணி, விமான எதிர்ப்புப் படையணி என்ற ரீதியில் புதிய படைப் பிரிவுகளை கட்டியெழுப்பினோம். இறுக்கமான ஒழுங்கமைப்புடன் பன்முகத் தாக்குதலை நிகழ்த்தவல்ல படையணிகளாக இவை உருவாக்கப்பட்டன. எதிரியின் படைநகர்த்தல் போருபாயம் பற்றிய எமது நீண்டகால அனுபவத்தை ஆதாரமாகக்கொண்டு, எதிரியைத் திகைப்பூட்டும் நுட்பமான தாக்குதல் உத்திகளையும் தற்காப்பு முறைகளையும் வகுத்தோம். கேந்திரமான இடங்களில் மிக உறுதியான பாதுகாப்பு நிலைகளை அமைத்தோம். இப்படியாக, சிங்களத்தின் மிகப்பெரிய படையெடுப்பை எதிர்கொள்ள நாம் எம்மைத் தயார்படுத்திக் கொண்டோம்.

சென்ற ஆண்டு மே மாதம் 13ல் தொடங்கி இன்றுடன் 365 நாட்கள் வரை நீடித்திருக்கும் 'ஜயசிக்குறுய்' சமரானது பாரிய அளவிலான தாக்குதல்களையும், மிகவும் உக்கிரமான சண்டைகளையும், பல ரகமான மோதல்களையும் கொண்ட பாரிய போர் நடவடிக்கையாகும். வலிந்து தாக்குதல், தற்காப்புத் தாக்குதல், அதிரடித் தாக்குதல் என்ற ரீதியில் சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவம்மீது நாம் நிகழ்த்திய தாக்குதல்கள் எதிரிக்கு என்றுமில்லாத பேரிழப்புகளை ஏற்படுத்தியதோடு எதிரிப் படைகளின் நகர்வு வேகத்தை தடுத்து நிறுத்தியது. தாண்டிக்குளத்திலும், பின்னர் கரப்புகுத்தி, விஞ்ஞானகுளத்திலும் நாம் மேற்கொண்ட வெற்றிகரமான வலிந்த தாக்குதல்கள் எதிரிப்படைகளை சிதறடித்து நிலைகுலையவைத்தன. இவ்விரு தாக்குதல்களிலும் எதிரிக்கு பெரும் உயிர்ச்சேதமும், பாரிய அளவிலான ஆயுத தளபாட இழப்பும் ஏற்பட்டது. வன்னி மண்ணை ஆக்கிரமித்து, எந்த திசையில், எத்தகைய பாதையை அமைத்தாலும் அதனை ஊடுருவித் தாக்கியழிக்கும் துணிவும், ஆற்றலும், பலமும் புலிப்படைக்கு உண்டு என்பதை இத் தாக்குதல்கள் எதிரிக்கு உணர்த்தியிருக்கின்றன.

புலிப்படை வீரர்களின் வலுமிக்க தற்காப்புப் போருக்கு தலைசிறந்த உதாரணமாக விளங்கியது புளியங்குளம். இங்கு பலமான பாதுகாப்பு நிலைகளை அமைத்து, ஐந்து மாதங்கள் வரை நிலைதளராது நின்று, எதிரியின் பல்வேறு முன்னேற்ற முயற்சிகளை முறியடித்தார்கள் எமது வீரர்கள். புலிவீரர்களின் மூர்க்கமான தற்காப்புத் தாக்குதல்களுக்கு முகங்கொடுக்க முடியாது, கண்டி வீதிப்பாதையை விட்டு காடுகளுக்குள் அகலக்கால் நீட்டியது சிங்கள இராணுவம். பின்னர் புதூர் சந்தியிலும், மன்னகுளத்திலும், சமீபத்தில் ஒலுமடுவிலும் புலிகள் மேற்கொண்ட துணிகரமான தற்காப்புத் தாக்குதல்கள் எதிரிக்கு பெரிய அளவில் உயிரிழப்புக்களை ஏற்படுத்தியதோடு, எதிரியின் மனவுறுதியையும் உடைத்தது. புளியங்குளத்தை அடுத்து இப்பொழுது மாங்குளத்தைக் கட்டிக்காத்துப் போரிடும் எமது வீரர்கள் எதிரிக்கு சிம்மசொப்பனமாக விளங்கிவருகிறார்கள்.

'ஜயசிக்குறுய்' சமரில், சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவம் தனது இலக்கை அடைவதற்காக சகலவிதமான தந்திரோபாயங்களையும் கையாண்டது. போரியல் விஞ்ஞான ஏடுகளிலுள்ள புதிய, புதிய உத்திகளையும் பரீட்சித்துப் பார்த்தது. போதாக்குறைக்கு அந்நிய இராணுவ மேதாவிகளின் போர்முறைத் திட்டங்களையும் நடைமுறைப் படுத்தியது. ஆயினும் இந்தப் போர்த்தந்திரங்கள் புலிகளிடம் பலிக்கவில்லை. இவற்றினால் புலிகளின் பாதுகாப்பு வியூகங்களை உடைக்க முடியவில்லை. இத்தந்திரோபாய முன்னேற்ற முயற்சிகள் எதிரிக்கு பின்னடைவுகளையும் பேரிழப்புக்களையுமே ஏற்படுத்தியது.

இந்த ஓராண்டுச் சமரில், சிறிலங்கா இராணுவம் மூவாயிரத்திற்கு மேற்பட்ட படையினரை





www.eelamview.com

www.eelamview.com



பலிகொடுத்திருக்கிறது. ஏழாயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் உடற்சேதம் அடைந்திருக்கிறார்கள். இந்த நீண்ட சமரில், சிறப்புப் பயிற்சிபெற்ற முன்னணிப் படையணிகள் பல சிதைக்கப்பட்டிருக்கின்றன. ராங்குப் பிரிவுகள் நாசம் செய்யப்பட்டிருக்கின்றன. ஆயுதக்களஞ்சியங்கள், வெடிமருந்துக் கிடங்குகள், இராணுவ வாகனங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன. அத்துடன் பெருந்தொகையான ஆயுத தளபாடங்களை புலிகள் இயக்கம் கைப்பற்றியிருக்கிறது. எதிரியின் இழப்பு மிகப்பெரிது. இத்தனை இழப்புக்களைச் சந்தித்தும், இன்னும் எதிரி தனது இலக்கை அடையவில்லை.

இந்தப் பெரும் சமரில் நாம் எதிர்கொண்ட ஒவ்வொரு சண்டையும் போர்க்கலையில் எமக்குப் புதிய அனுபவத்தைப் பெற்றுத்தந்தது. இதனால் எமது போராடும் திறன் பெரிய வளர்ச்சி கண்டிருக்கிறது. இந்தப் போரனுபவம் எமது போராளிகளின் மனோதிடத்தையும் இலட்சிய உறுதியையும் மேலும் வலுவடையச் செய்திருக்கிறது. இந்த ஓராண்டு அக்கினிப் பிரவேசத்தில் நாம் எரிந்து போகவில்லை. மாறாக, நாம் புத்துயிர்பெற்று புதிதாக எழுந்தோம். பலமாக எழுந்தோம்.

எதிரியின் படைபலம் பெரிது. ஆயுத பலமும் பெரிது. வளமும் பெரிது. இந்த வகையில், இராணுவ சமபலம் எதிரிக்கே சாதகமாக இருந்தது. ஆனால் எதிரியிடம் இல்லாத ஒரு பலம் மட்டும் எம்மிடம் இருந்தது. அதுதான் எமது போராளிகளின் மனோபலம். எமது போராளிகளிடமிருந்த அசைக்கமுடியாத மனவுறுதியும், அதனால் பிறக்கும் அபாரமான துணிவுமே வன்னிக் களத்தில் எமது அதிசக்திவாய்ந்த ஆயுதமாக இருந்தது. மலையாக எதிரியும் மடுவாக நாமும், சமச்சீரற்ற இராணுவ நிலையில் நின்றபோதும், இந்த நீண்ட சமரில் எமது போராளிகள் வெளிக்காட்டிய நெஞ்சுறுதியானது எமக்கு மலையான பலத்தைக் கொடுத்தது. அந்த மலையான பலமே, வன்னியில் சிங்கள இராணுவ பூதத்தை நிலைகுலைய வைத்தது.

ஓயாத புயலாக ஓராண்டு காலம் நீடித்த இப்பெரும் சமரில் எத்தகைய துன்பங்களைச் சுமந்து, எத்தகைய நெருக்கடிகளைச் சமாளித்து, எத்தகைய ஆபத்துக்களை எதிர்கொண்டு எமது வீரர்கள் மனவுறுதியோடு போராடினார்கள் என்பதை நான் நன்கறிவேன்.

நெருப்பு மழையாக ஓயாது பொழிந்த பீரங்கி எறிகணைகளுக்கும், மின்னல் வேகத்தில் சீறிப்பாய்ந்த விமானக் குண்டு வீச்சுக்களுக்கும் முகம் கொடுத்து, ஓய்வில்லாது, உறக்கமில்லாது, உருப்படியான உணவில்லாது எமது வீரர்கள் சளைக்காமல் போரிட்டார்கள்.

வன்னிக்களத்தில் இயற்கை அன்னையும் எமது போராளிகளுக்கு இரக்கம் காட்டவில்லை. மாரிப்பெருமழையும், உறையவைக்கும் பனியும், கோடையின் கொளுத்தும் வெயிலும், பாம்பும், நுளம்பும், மலேரியாவுமாக வன்னிக் காட்டின் கொடுமையான சூழலையும் எமது போராளிகள் சகிக்க வேண்டியிருந்தது.

போர் ஓய்ந்த வேளைகளிலும் எமது போராளிகள் ஓய்வெடுத்துக் கொள்ளவில்லை. பதுங்கு குழிகள் வெட்டி, பாதுகாப்பு அரண்கள் கட்டி, அந்தக் காப்பரண்களில் குடியிருந்து, இரவு பகலாக விழித்திருந்து, எமது மண்ணைக் காப்பதில் அவர்கள் உறுதியாக நின்றார்கள்.

'ஜயசிக்குறுய்' சமரில் எமது போராளிகள் வெளிப்படுத்திய மனவலிமையும், செயலாற்றலும், அபாரமான சகிப்புத் தன்மையும் பெரிதும் பாராட்டத்தக்கது. எனது வீரர்களின் இத்தகைய தலைசிறந்த போர்ப்பண்புகளைக் கண்டு நான் பெருமை கொள்கின்றேன்.

இந்த வரலாற்றுச் சமரில் எமது தளபதிகள் வகித்த பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது. தளபதிகளின் தளராத உறுதியும், திறனாற்றலும், கடும் உழைப்பும் காரணமாகவே வன்னிக் களத்தில் நாம் வியக்கத்தக்க வெற்றிகளை ஈட்ட முடிந்தது. படையணிகளைச் சீரமைத்து, ஒழுங்கமைத்து, தாக்குதற் திட்டங்களைச் செம்மையாகச் செயற்படுத்தி, களத்தில் போராளிகளை ஊக்குவித்து வழிநடத்தி, எமது தளபதிகள் காட்டிய செயற்திறன் பெரிதும் பாராட்டத்தக்கது.

பல்வேறு பிரிவினரதும் ஒட்டுமொத்த முயற்சிகள் ஒன்றுகுவிக்கப்பட்டதாகவே இப்பாரிய படையெடுப்பிற்கு நாம் முகங்கொடுத்தோம். ஒவ்வொரு பிரிவும் தனது பணியைத் திறம்படச் செய்தது. எதிரியின் பல முன்னேற்ற முயற்சிகளின் முதுகெலும்பை உடைத்துவிட்ட பீரங்கிப் படைப்பிரிவு, பெரும் ஆபத்துக்களை எதிர்கொண்டு எதிரியின் நிலைகளையும், நகர்வுகளையும் கண்காணித்து அறிவித்த வேவுப்பிரிவு, எதிரியின் ராங்க், கவசவாகன அணிகளைச் சிதைத்த ராங்கு எதிர்ப்பு விசேட அணி, எதிரியின் மனவுறுதியைச் சிதறடித்த கரும்புலி அணி, தாக்கும் ஹெலிகளை பலவற்றை களத்திலிருந்து அகற்றிய விமான எதிர்ப்பு அணி, ஆகிய படைப் பிரிவுகளின் சாதனைகள் பாராட்டுக்குரியவை.

எமது இயக்கத்தின் மருத்துவப் பிரிவு இந்தச் சமரில் ஆற்றிய பங்கு மகத்தானது. விழுப்புண் அடைந்த பெருந்தொகையான போராளிகளுக்குத் திறம்படச் சிகிச்சையளித்து, பராமரித்து, அவர்களது உயிர்காத்து எமது மருத்துவப் பிரிவினர் ஆற்றிய பங்கை நான் வெகுவாகப் பாராட்டுகிறேன்.

பலத்த இடர்களுக்கும் உயிர் ஆபத்துக்களுக்கும் மத்தியில் வீரஞ்செறிந்த இப்போராட்டத்தை ஆவணப்படுத்திய வீடியோ, புகைப்பட பிரிவினருக்கும் எனது பாராட்டுக்கள்.

எறிகணைத் தாக்குதல்கள், குண்டுவீச்சுக்களுக்கும் முகம்கொடுத்து, இந்த நீண்ட காலச் சமரில் தமது பங்கைத் திறம்படச் செய்த வாகனப் பிரிவினருக்கும் வழங்கல் பிரிவினருக்கும் எனது பாராட்டுக்கள் உரித்தாகுக.

இச்சமரில் பொதுமக்களின் பங்களிப்பும் இருந்திருக்கிறது. இதையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

எமது போராளிகளின் உயிர்காக்க இரத்த தானம் வழங்கி, எமது போராளிகளின் பசி தீர்க்க உலர் உணவு வழங்கி, எமது போராளிகளின் பாதுகாப்பிற்காக பதுங்கு குழிகள் வெட்டி, எமது மக்கள் ஆற்றிய பெருந்தொண்டிற்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

நாளையுடன் இரண்டாம் ஆண்டில் கால் எடுத்துவைக்கும் 'ஜயசிக்குறுய்' சமர் மீண்டும் தொடர்ந்து நீண்டு செல்லவிருக்கிறது. இதற்கு காலவரையறை இடுவதற்கு சிங்கள அரசுக்கு இப்பொழுது துணிவில்லை. எனினும் இந்த இராணுவ நடவடிக்கையோடு அரசியல் நோக்கங்களும் பின்னிப்பிணைந்து கிடப்பதால் இந்தப் பாதை திறப்புச் சமரை அரசு கைவிடப் போவதில்லை. இராணுவ கட்டளைப்பீடத் தளபதிகளை மாற்றியும், இராணுவ அதிகாரிகளுக்கு முதிராநிலைப்பதவியுயர்வுகளை வழங்கியும், இராணுவத்திலிருந்து ஓடியவர்களுக்கு மாறி, மாறிப் பாவ மன்னிப்புக்களை வழங்கியும், ஊக்கமிழந்து சோர்ந்து போன இராணுவ இயந்திரத்தை முடுக்கிவிடுவதற்கு சிங்கள அரசு பகீரத முயற்சிகளைச் செய்து வருகிறது. இதனால் மீண்டும் 'ஜயசிக்குறுய்' சமர் தொடரும். மீண்டும் இந்த வணங்காமண்ணில், ஆக்கிரமிப்பாளரின் இரத்தம் ஆறாக ஓடவிருக்கிறது. மீண்டும் ஆயிரமாயிரம் அப்பாவிச் சிங்கள இளைஞர்கள் கண்டிப்பிரபுத்துவ வர்க்கத்தின் வரட்டுக் கௌரவத்திற்கும் குருட்டுக் கொள்கைக்கும் பலிக்கடாவாகப்போகிறார்கள்.

'ஜயசிக்குறுய்' சமரின் களநிலை உண்மைகளை சந்திரிகா அரசு இருட்டடிப்புச் செய்து வருகிறது. போரின் பேரிழப்புக்களை மூடிமறைத்து, பொய்யான பரப்புரைகளைச் செய்து, சிங்கள மக்களையும் உலகத்தையும் ஏமாற்றி வருகிறது. ஆயினும் இந்த இராணுவ நடவடிக்கை ஓராண்டு காலம் நீடித்த தனிச் சமராக உலகப் போரியல் வரலாற்றில் பதியப்பட்டிருக்கும் உண்மையை அரசால் மூடிமறைக்க முடியவில்லை. இச்சமர் நீண்ட காலம் நீடித்துச் செல்வதையும், அதன் நிச்சயமற்ற எதிர்காலத்தையும் கணிப்பிடும் பொழுது, இப்படை நடவடிக்கையானது சிறிலங்கா அரசுக்கு ஏற்பட்ட பாரிய இராணுவப் பின்னடைவாகவே உலகம் மதிப்பீடு செய்யும். அத்தோடு, இச்சமரில் எமது இயக்கம் வெளிப்படுத்திய போர்த்திறன், உலக இராணுவ நிபுணர்களை வியப்பில் ஆழ்த்தியிருக்கிறது. தமிழர் படையான புலிப்படை, வீரம் மிக்க ஒரு தேசிய விடுதலை இராணுவமாகப் பெருவளர்ச்சி கண்டிருக்கிறது என்ற உண்மையையும் உலகம் உணர்ந்துள்ளது.

'ஜயசிக்குறுய்' சமர் சந்திரிகா அரசை பெரும் நெருக்கடிக்குள் தள்ளிவிட்டிருக்கிறது. தமிழரின் தாயக மண்ணை இராணுவ பலத்தால் அடக்கி ஆளவேண்டுமென்ற ஆதிக்கவெறி சிங்கள தேசத்தை அழிவுப்பாதையில் இட்டுச் செல்கிறது.

நாம் எமது தாயக மண்ணை எமது உயிரிலும் மேலாக நேசிக்கிறோம். எமது தாயக தேசம் எமது இனத்தின் உயிருக்கு நேரானது. அந்த மண்ணைப் பாதுகாப்பது, எமது இனத்தின் ஆன்மாவைப் பாதுகாப்பதற்கு நிகரானது. எமது தாயகத்தின் இதயத்தை ஊடுருவி நிற்கும் ஆக்கிரமிப்பாளரை எமது மண்ணிலிருந்து விரட்டியடிக்கும் வரை 'ஜயசிக்குறுய்' சமர் ஓய்ந்துவிடப்போவதில்லை.

'ஜயசிக்குறுய்' சமரில் வீரமுடன் களமாடி, எமது மண்ணின் விடிவிற்காக மடிந்து போன ஆயிரத்து முன்னூறு போராளிகளுக்கும் எனது சிரம் தாழ்த்தி வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' ○



## மன்னகுளத்திலிருந்து மகிழடித்தீவிற்கு...

அன்புள்ள அம்மா
அங்கு மாவீரர்நாள்
ஊர்கள்தோறும் உணர்வுடன்
எழுச்சி பெற்றிருக்கும்
தவறாமல் துயிலுமில்லம் சென்றிருப்பாய்
அண்ணாவிற்கு விளக்கேற்ற.
துயரத்தையும் மீறி
பெருமை பட்டிருப்பாய்
என் மகன்
சராசரியல்ல சரித்திரம்
என்பதற்காக——

இங்கு எம்
இதயபூமியில் எதிரி.
ஆனாலும் எம்
இதயமெல்லாம் உறுதி.
எடுத்துவைக்கும் ஒவ்வோர் அடிக்கும்
அவன் கொடுக்கும் விலை
"இது சிங்களவன் தேசமல்ல
செந்தமிழன் மண்" என்று
அவனுக்கு உணர்த்தியிருக்கும்.

மன்னகுளம் !
எதிரியாயினும் இதயத்தைப்
பிழிந்த கோரம்.
கூலிக்குக் கொண்டுவரப்பட்டவர்கள்
குதறப்பட்டுக் கிடந்தகோலம்
இந்த மண்ணே எழுந்து நின்று
கோரதாண்டவமாடியதா?
கலிங்கத்துப்பரணி!
கதைசொல்லக் கேட்டிருக்கின்றோம்.
ஆனால்
இங்குதான் பார்த்தோம்.
காளிகளும் கூழிகளுமில்லை
நாய்களும் நரிகளும்தான்.
அன்று கரிகாலனின் சேனை
கருணாகரனால் நடத்தப்பட்டது.
இன்றும் கரிகாலனின் படை -
காவியம் படைக்கின்றது.

வீட்டிற்கு போராளிகள் வருவார்கள்
விருந்தோம்பல் பற்றி உனக்கு
விளக்கம் தேவையில்லை.
தம்பிக்கு என்னைப்பற்றித்தெரிவு.
வீரர்களாய் அங்கு வருவோம்
இல்லை
விதைகளாய் இங்கு வீழ்வோம். ○

அன்புடன் மகன்,
வஞ்சியூரன்
[போராளி]



www.eelamview.com

www.eelamview.com




# பொக்கைவாயானது ஜயசிக்குறுய்-இன்று பக்கவாதத்திலே... ஜயசிக்குறுய்

"சிக்குறுய் சிக்குறுய் ஜயசிக்குறுய்- வந்து
சிக்கெடுக் கின்றது ஜயசிக்குறுய்
பொக்கைவாயானது ஜயசிக்குறுய் – இன்று
பக்கவா தத்திலே ஜயசிக்குறுய்."
13. 05. 1998 இன்று
ஜயசிக்குறுயிக்குப் பிறந்தநாளல்ல –
இறந்தநாள்.
ஈழத்தமிழனே!
இன்றுனக்கு விடிந்தது காலைமட்டுமல்ல
வெல்வாயென்ற நம்பிக்கையின் துளிர்ப்பும்தான்.
இன்றுன் முற்றத்தில் பூக்கள்மட்டும் மலரவில்லை
புதியவாழ்வொன்றின் சிரிப்புமென்றறிவாய்.
அடிவற்றிவிடுமென்ற கிணறொன்றின் ஆழத்தில்
பீறிட்டெழுந்தது புதிய ஊற்று.
மூச்சடங்கிப் போகாதென்ற முனைப்பிது.
நம்பிக்கை நாற்றங்கால் போட்ட நாளின்று.
இனி அழுதது போதுமென்று எழுவாய்.
நிலவைப்பிடித்து நெஞ்சிற்சூட நிமிர்வாய்.
முகிலையெடுத்து முகம்துடைத்துக் கொள்க.
காற்றைப்பிடித்துக் கயிறாகத் திரித்து
ஏற்றக் கொடியாக்கி இறை.

## உலைக்களம்

- வியாசன்

படுத்திருக்கும் பழையபாயைச் சுருட்டி எறிந்துவிட்டு
நட்சத்திரங்களை எடுத்தடுக்கி மெத்தையிடுக
இன்றுனக்குச் சந்தோஷ நாளொன்றின் ஜனனம்.
வன்னிமரங்களுக்கு வளைகாப்பு.
அகதிக்குடிசைகளுக்கு ஆரோகண உற்சவம்.
குழாய்க்கிணறுகளுக்கு கும்பாபிஷேகத்தினம்.
உன்பிள்ளைகள் உனக்குப் பெருமை சேர்த்தனர்.
நரகாசுர சங்காரத்துக்குத் தேதிகுறித்த நாளின்று.
கண்டிவீதியிலேறிக் களிப்புற்று
வென்றிலர் பகைவர்களென்று
பறவைகளுக்குப் பாடல் கற்றுக் கொடு.
எத்தனை காலமாய் இழிவுற்றிருந்தாய்.
குற்றேவல் செய்வதே குலப்பெருமையெனக்
கற்பனைக்குச் சேலைகட்டி
கண்ணாடி முன்நின்று களித்தாய்.
எச்சிற்படிகம் சுமந்து இன்புற்றாய்.
ஆளபவனெவனெனினும் அவனுக்கடங்கி
காலடியில் கைகூப்பத் தொழுதாய்.
தலைநிமிர வழியற்றுத் தாழ்ந்திருந்த உனக்கு
பெருமை வந்தடைந்தது.
நாயென்றுன்னைப் பேசிய நாவுகள்
புலியென்றுன்னைப் போற்றியதே! யாரால்?
புறமொதுக்கித் தாழ்வாரத்தில் போட்டிருந்த உன்னை
நீயும் மனிதனென நிமிரவைத்தவர் எவர்?
பிரபாகரன்;
புலிகள்;
உன்பிள்ளைகள்— இவர்கள்தான்.
ஒப்பனையில் மயங்கி உறங்கிக்கிடந்தவனே!
இன்றுனக்கு எழுச்சிநாள்.
இற்றைவரையான வரலாற்றில்
இன்றுதான் உனக்கு இனியநாள்.
உன்னாலும் முடியுமென நீயே உணர்ந்தநாள்.
வேரறுத்துன்னை வெளியே கலைத்துவிட்டு
ஊருக்குள் புகுந்தனர் அசுரர்.
உரச்சாக்குமட்டும் உனக்கு உறவாச்சு.
மரத்தடிமனிதராய் தமிழர் மாறினர்.
எதிர்காலம் சூனியமாச்சு.
இருளிற் கிடந்தன உறவுகள்.
ஓடிய இடத்திருந்தும் உன்னைக் கலைப்பேனென
சந்ததம்கொண்டது சந்திரிகா அரசு.
எதிர்கொண்ட எதையும் அள்ளிவிழுங்கியபடி
கண்டிவீதியேறி வந்தது.
புலிக்கதை முடிந்ததென்று சாக்குருவிகள் பாடின.
வன்னிக்குள் அழிந்தது வரிப்புலிச்சேனையென்று
களிப்புற்றனர் கால்கழுவிகள்.
இடைத்தளவில் மகிழ்வுற்று
அடிவருடிகள் அரசேறக் காத்திருந்தனர்.
பல்லுப்பிடுங்கிய பாம்புகள்கூடப் படமெடுத்தாடின.
புலிகள் தோற்றுப்போவார்களென்ற பெருநம்பிக்கையில்
தேர்தல்நடிகர்கள் அரிதாரம் பூசிக்கொண்டு
குடாநாட்டில் குடியேறினர்.
ஜயசிக்குறுய் ஜெயிக்குமென்பதில்
நம்பிக்கை வைத்துத்தான் இத்தனையும் நடந்தன.
பொன்விழா கண்டிக்குப் போனகதையும் இதுதான்.
13. 05. 1997 அன்று
விகாராதிபதி எடுத்துக் கொடுத்த விசேட நாளில்,
தரணியாளவல்ல பரணிநட்சத்திரத்தில்,
மேஷராசியில்,
உதயகால உத்தம நேரத்தில்,
மந்திரித்துக் கட்டிய மஞ்சள் நூலுடன்
"வெற்றிநிச்சயம்" வீதியில் இறங்கியது.
பத்துநாட்களில்
ஆகப் பத்தே நாட்களில்
கண்டிவீதி என்காலில் விழுமென
கைத்தடி காலக்கெடு விதித்தது.
சமாதானத்துக்கான சண்டையென்றது
பொறிகமக்கும் பெரியகண்ணாடி.
நள்ளிரவு விருந்துமுடிந்து நாடுதிரும்பிய
"அவ்வைசண்முகிக்கு" ஆனந்த பரவசம்.
குடாநாட்டு மக்களுக்கான "சிலுவைகம்பு" என
சக்கரவர்த்தினியின் தங்கவாய்திறந்தது.
வெற்றிநிச்சயத்துக்கு விளக்கம் சொன்னது.
தடல் புடலாகத் தம்பட்டம் அடித்தபடி
சிக்குறுய் சிறிப்பாய்ந்தது.
புலிகளினித் தப்பமுடியாதென்றே பேசப்பட்டது.
"போஸ்ற்மோட்டம்" செய்யும் ஆய்வாளர்கள் கூட
புலிக்கதையை முடித்துப் புதியகதை தொடக்கினர்.
ஓமந்தைவரை ஏவற்பேய்கள் எக்காளமிட்டன.
புலியழித்து நகருகிறோம் என்றபெருமிதம்.
கண்டிவீதியின் வரைபடத்தைக் கையில் வைத்துக்கொண்டு
உயிர்நிலை எட்டும் தூரத்துக்கு வரும்வரை
காத்திருந்தான் தலைவன்.
கட்டளைக்குக் காத்திருந்தனர் புலிகள்.
பாதித்தூரம் கடந்ததும்



"வெற்றியினி உங்கள்பக்கம் விளையாடுங்கள்" என்று
கட்டளைபிறந்தது.
பதுங்கியிருந்த வேங்கைகள் பாயத்தொடங்கினர்.
முகத்திலொன்று,
முதுகிலொன்று,
கையிலொன்று,
காலிலொன்றென விழுந்தது புலியினடி.
சிக்குறுய் சிதறிச் சிலும்பியது.
முன்னே போனால் முகத்துக்கடி.
பின்னே போனால் முதுகுக்கு அடி.
மூஞ்சூறை விழுங்கிய சாரைப்பாம்பாய்
முக்கிக்கொண்டு கிடக்கிறது ஜயசிக்குறுய்.
பிரபாகரன்:
அடியும், முடியும் அறியமுடியாத அதிசயம்.
புலிகள்:
வேரையும், விழுதையும் இனம்காணமுடியாத விருட்சம்.
எவனெவன் எந்தமொழியிற் கேள்வி கேட்பானோ
அவனவனுக்கு அந்தமொழியிற் பதில் சொல்பவர்களே
புலிகள்.
"பாரடா தமிழரின் பாதைமீதேறி–யாழ்ப்
பாணம் போவேனென்ற ஜயசிக்குறுய்.
பன்னிரண்டானது மாதங்கள் ஆயினும்
பல்லிளிக்கின்றது ஜயசிக்குறுய்." ○



www.eelamview.com

www.eelamview.com



# மண் சுமக்கும் ஊழியம்

"ஜயசிக்குறுய்!
வீம்பு முற்றிய சாத்தானின்
வீதிப்பிடிக்கும் வேதம்."

1997 மே 13 ஆம் நாள் சாத்தான் ஓதத்தொடங்கிய இந்த வேதம் – ஒரு வயது நிறைந்து - ஊனக்குழந்தையாய் தெருவில் கிடந்து சீரழிகிறது.

சாதாரண வேதமல்ல அது. அழிவின் கலைகள் தெரிந்த அனைத்து அஸ்திரங்களையும் கொண்டு பாராயணம் செய்யப்படுகின்ற சாத்தானின் வேதம்.

நவீன போராயுதங்களையும், இனவெறி நிறைந்த இராணுவத்தையும் முழுவீச்சோடு பயன்படுத்தியும், வீதியை வெற்றிகொள்ள முடியாமல் ஜயசிக்குறுய் வேதம், வாதக்காலாய் நொண்டுகிறது.

தான் ஓதுகின்ற வேதம் வசமெதையும் சம்பாதிக்கப்போவதில்லை என்பதைத் தெரிந்துகொண்ட பின்பும்- ஊர்பிடித்துச் சேமித்த தனது மகிமையைக் காத்துக்கொள்ள- சிங்கள இராணுவ இயந்திரத்தைச் சிதைத்தபடி சாத்தானின் வேதம் அவலம் நிறைந்த ஓலமாய் எழுகிறது.

சாத்தானின் வினைத்திறனையெல்லாம் விழுங்கி ஏப்பமிடுகின்ற தனிப்பெரும் சக்தியாக தமிழர்சேனை விஸ்வரூபமெடுத்து நிற்கிறது.

தமிழர்சேனை! உச்சரிக்கும் கணத்தில், மயிர்க்கால்கள் குத்திட்டெழ தேகமெங்கும் பரவுகிறதே ஒரு மென்னதிர்வு; அது சுதந்திரத்தின் சுகம்.

சுதந்திரத்தின் சுகம், தங்கள் நேசத்திற்குரிய மக்களின் தேகங்களில் நிலைபெறுவதற்கு, அந்த மென்மனிதர்களின் உடல், பொருள், ஆவி, அனைத்தும் ஊழியம் செய்கின்றன.

கடுழியம்... –

அவர்களின் வாழ்வசைவது சிற்றாறு ஊரும் சீதளச்சோலைகளிலல்ல; பற்றைக்காடுகளில்; பாழ்வெளிகளில்; உயிர் உருவும் பொறிகளுக்கிடையில்.

தாய்நாட்டின் விடுதலைக்காகவும், மக்களின் மீட்சிக்காகவும் விடுதலைப் போராளிகளின் வாழ்வு சிலுவைப்பாடாகிறது. மரிக்கின்றபோதும் அந்த மனிதர்களின் சீவியம் நித்தியமானது. நீளும் காலங்களிலும் தொடரும் சந்ததிகளிலும் அவர்கள் சீவிக்கின்றார்கள்.

கிளர்ந்தெழும் ஆசாபாச உணர்வுகளையெல்லாம் நசித்து அடக்கி - மண்மீது காதல், இனப்பற்று, மக்கள் நேசம், சுதந்திர வேட்கை என்ற மனுக்குலத்தின் ஆதார உணர்வுகளுக்கு உயிரூட்டி – ஒப்பற்ற விடுதலை நெருப்பாக விடுதலைப்புலிகள் ஒளிர்கிறார்கள்.

காட்டு வெய்யில். ஓரிடத்தில் தரித்து நின்றால் கொழுத்திவிடுவேன் என்பதுபோல் மனிதர்களை ஓட, ஓட விரட்டும் கோர வெய்யில். காற்றிறங்கா பதுங்ககழியுள்ளிருக்கும் புலிவீரர்களின் தேகம் புழுக்கத்தில் அவியும். வியர்வை பெருகி சீருடை தெப்பலாகும். வெளியிடை உலாவி - காற்றோடு மோதி ஆசுவாசிக்க மனசு அவாவும். ஆனால், அந்தச் சூழலின் போர்விதி, உள்ளிருந்து சற்றேனும் தலைநிமிர்த்த அனுமதிக்காது. பதுங்ககழிச் சுவரோடு தலைசாய்த்து – மண்ணைச் சிநேகித்து - மண் காக்கும் ஊழியத்தில் திளைப்பார்கள் புலிவீரர்கள்.

தாரை, தாரையாக பெருமழைத் துளிகள் நிலத்தைப் பொளியும். மண்ணைத் தழுவி மனம்போன போக்கில் வெள்ளம் பெருகும். பதுங்ககழிகள் நீர்நிலைகளாய்த் தளம்பும். புலிவீரர்களின் தேகச் சூட்டை நீர் பருகும். போர்வைக்குள் சுருண்டு கதகதப்புத் தேடும் பொழுதில், குளிரில் விறைத்து- பற்கள் வெடவெடக்க – சமர் தவளும் திசைபார்த்து பொழுது கழிப்பார்கள் பிள்ளைகள்.

முழுத்துக்கொன்றாய் நிலத்தைக் குதறும் எறிகணைகள்; கூடுகலைந்த குழவிகளாய் கொட்டவரும் ரவைகள்; காவலரண்களை இடித்து நொருக்கும் வெறிகொண்டு - உறுமி நகரும் இரும்பரண்கள்; இலக்குகளைத் தேடித் தேடி இடி விதைக்கும் வான்போருர்திகள்; இத்தனை அட்டகாசங்களுடனும் சிங்கள இராணுவ இயந்திரம் நிலம் விழுங்கப் போர் திறக்கும்.

பற்றியே தீருவேன் என எதிரி பற்றவைத்த நெருப்போடு, தமிழர்சேனையின் மண் காக்கும் உறுதியில் மூண்டெழுந்த தீ குமுறிப் பொருதும். புகைமண்டலமும் புழுதிமண்டலமும் காட்சிகளை விழுங்க, ஒலி நுகர்வில் போர் உருளும்.

சிங்கள இராணுவ இயந்திரத்தின பேரியக்கவலுவை தமிழர்சேனையின் முறுகித் திரண்ட மனவலு திணறடிக்கும். புலிவீரர்களின் உடல்வலு உருவாக்கிய காப்பரண்களும், பதுங்ககழிகளும் எதிரியின் படைக்கல வலுவை நெஞ்சிலேந்தி நின்றெதிர்க்கும்.

குருதி ஒழுகி பதுங்ககழி சகதியாகும். அங்கங்கள் பிய்ந்து உடலோடு உறவறுக்கும். உயிர்நூல் இழையை – போர்த்தறியில் - சுதந்திரப் புடவை நெய்யக் கொடுத்த புகலுடலகள் மண் தோய்ந்து கிடக்கும். ஆனாலும், நிலம் விழுங்க முனையும் கணத்தையும் தேச ஊழியத்தில் செலவிடுகின்ற புலிவீரர்களின் தேகங்களில் அசதி நிறைந்து வழியும். இரவானால், இருளுக்குள் அசைகின்ற இருள் தேடும் பொழுதில், இமைகளில் எறியிருந்து அசதி அழுத்தும். இமைகள் இரண்டையும் இழுத்துவிட முனையும் நித்திரையோடு. தேசத்தின் நித்தியத்திற்காக அவர்கள் சமராடுகிறார்கள்.

குடலைப் புசிக்கும் பசியோடும், தொண்டையை உலர்த்தும் தாகத்தோடும் அவர்கள் சமராடுகிறார்கள்.


களத்தின் முன்னரங்கிலுள்ள புலிவீரர்களுக்கான விநியோகப் பாதையைக் குறிவைத்து எதிரி செலுத்துகின்ற எறிகணைகளுக்குள் சிக்காது – உயிரையும் காத்து, உணவையும் காத்து - காவலரண்களுக்கு உணவு கொண்டு செல்வதே ஒரு தனிச்சமர்தான்.

காவலரணிலிருந்து நெடுந்தொலைவில் இருக்கும் நன்னீர்நிலைகளிலிருந்து நீரெடுத்து வரும் புலிவீரர்களும் அந்த எறிகணைச் சமருக்கு முகம்கொடுத்தே ஆகவேண்டும்.

இதனால் குறித்த நேரத்தில் உணவோ, நினைத்தமாத்திரத்தில் தாகம் தணிக்க நீரோ காவலரணிலுள்ள போராளிகளுக்கு கிட்டுவதில்லை.

மொத்தத்தில் – புலிவீரர்களைப் பொறுத்தவரையில் - ஜயசிக்குறுய் ஒரு சமரல்ல. சிங்களச்சேனையோடு, இயற்கையோடு, விஷ உயிரிகளோடு பசியோடு, தாகத்தோடு, தூக்கத்தோடு புலிகள்சேனை நடத்துகின்ற பல்வேறு சமர்களடங்கிய ஒரு பெரும் போர்.

ஜயசிக்குறுயின் ஆசையை



பகைக்கெதிரான போர் சலியாது, சளையாது நீளும் ... –

போராளிகளின் காவலரண் வாழ்வு என்பது வெறுமனே எதிரியோடு சமராடுவது மட்டுமல்ல ..

காலமாற்றங்கள் பிரசவிக்கின்ற இயற்கையின் சீற்றங்களோடு அவர்கள் சமராடுகிறார்கள்.

தன் மீது முட்டுகின்ற எதையும் கொட்டுவதற்குத் தயாராய் கொடுக்கைத் தூக்கியபடி அலையும் நட்டுவக்காலிகளோடும், கடித்த நொடியில் உயிரெடுக்கும் பாம்புகளோடும், குருதியைக் குடித்து – மலேரியாவைச் செலுத்திவிட்டுப் போகும் நுளம்புகளோடும் அவர்கள் சமராடுகிறார்கள்.

போர்செய்த உடலசதி. ஓய்வு கேட்டு உடல் கெஞ்சக் கெஞ்ச - உருக்குலைந்த காவலரண்களைச் செப்பனிட்டு - மேலதிக பதுங்ககழி வெட்டி - தங்கள் வாழ்வின் ஒவ்வொரு

நிராசையாக்கிக்கொண்டிருக்கின்ற தமிழர்சேனையின் முறியடிப்புப் போரின் வருட நிறைவு, தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு அற்புத நிகழ்வு. தமிழர்சேனையின் நெஞ்சுரத்தையும் போர் வினைத்திறனையும் உலகுக்கு முழக்கி நிற்கும் கீர்த்தி மிகு வருடம்.

தமிழினத்திற்கு கீர்த்தி புனையும், ஜயசிக்குறுய் முறியடிப்புப் போரின் வருட நிறைவு, சிங்களத்தின் வரலாற்றில், அதன் இராணுவத்திற்கு அபகீர்த்தியை விளைத்த வருடமாக - கறுத்த வருடமாக - நிலைத்து நிற்கப்போகிறது.

ஜயசிக்குறுய் தொடர்கிறது –––

குருதிச் சகதியில் கால்பதித்து – வேரிறக்கி, புலிகள்சேனையின் நிலைபெயராக் காத்திருப்பும் தொடர்கிறது...

"மீளவழி ஏதுமற்ற வீதிவழி நீள்கிறது கைத்தடியின் காலம்."

www.eelamview.com

www.eelamview.com



# ஒரு வருடச் சமர்

சிங்களத்தின் படைப்பிரிவுகள் ஒன்றன் பின் ஒன்றாக சிதைந்து - செயலிழந்து வருவது மூன்றாம் ஈழப்போரின் முக்கிய விளைவாகிவிட்டது. வான்படை படுமோசமாகப் பாதிக்கப்பட்டு முடங்கிப்போயுள்ளது. கடற்படையும் தனது செயற்திறனை இழந்து - கடலாதிக்கப் பிடியையும் இழந்துவருகின்றது.

'ஜயசிக்குறுய்' சமரின் விளைவுகளில் ஒன்றாக சிங்களத்தின் ராங்க்குப் படையும் சிதைந்து வருகின்றது. இந்த ஒரு வருடச் சமரில் மொத்தம் 20 ராங்க்குகளை அது இழந்துள்ளது. தனது கவசப்படையணியில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமான எண்ணிக்கையுடைய கவசங்களை இந்த ஒரு வருடச்சமரில் அது இழந்துள்ளது.

இதேவேளை, 'ஜயசிக்குறுய்' சமரின் விளைவுகளில் மற்றொன்றாக சிங்களத்தின் சிறப்புப் படைப்பிரிவுகளான விசேட கொமாண்டோ அணிகளும் அழிந்துள்ளன. சிங்களப்படையைப் பொறுத்தவகையில் அதன் விசேட கொமாண்டோ படையினர் நடையகற்றிகளாகச் செயற்படுகின்றனர். கடினமான சூழ்நிலைகளின்போது நகர்விற்கான - அல்லது தாக்குதலிற்கான முன்முயற்சிகளை எடுத்து சண்டைகளின்போக்கை நிர்ணயிப்பதில் இவர்கள் பிரதானபங்கு வகிக்கின்றனர்.

மன்னகுளம் - புதூர்சந்தி மீது புலிகள் நிகழ்த்திய முறியடிப்புத்தாக்குதலின் போதும்-தாண்டிக்குளம் மீது நிகழ்ந்த வலிந்த தாக்குதலின் போதும் சிங்களத்தின் கொமாண்டோ அணியினரே சிக்கி அழிந்திருந்தனர். இந்த மூன்று முக்கிய தாக்குதல்களில் மட்டும் ஏறக்குறைய 3000 ஆட்களை [சாவு + காயம்] கொமாண்டோ படையணிகள் இழந்துள்ளன.

'ஜயசிக்குறுய்' படைநடவடிக்கைக்கு ராங்க்குப்படைப்பிரிவும் - விசேட கொமாண்டோ அணிகளினதும் தேவை இன்றியமையாததாகும். ஆயினும் இந்த இரண்டுவகைப் படைப்பிரிவுகளையும், 'ஜயசிக்குறுய்' ஒருவருடச்சமர், விரியமிழக்கச் செய்து விட்டது.

'ஜயசிக்குறுய்' சமரின் விளைவாக சிங்களப் படை சந்தித்துள்ள முக்கிய பிரச்சனையாக ஆட்பற்றாக்குறையைக் குறிப்பிடலாம். கடந்த ஒருவருடச் சமரில் சிங்களப்படை சந்தித்த ஆள் இழப்பை, படைத்தலைமை எதிர்பார்க்கவே இல்லை. குறிப்பாக உடற்சேதமடைந்த நிலையில் களத்தைவிட்டு வெளியேறும் படையினரது எண்ணிக்கை பல்லாயிரமாக இருக்கும்! என்று படைத்தலைமை நினைத்துப்பார்த்திருக்காது.

இந்த உடற்சேத - உயிரிழப்பு அதிகரிப்பிற்கு முக்கியகாரணியாக புலிகளின் மோட்டர் - ஆட்டிலறித் தாக்குதலின் விரியமே அமைந்துள்ளது. இத்தகைய உயர்பரிமாணத்தில், புலிகள் எறிகணைத் தாக்குதல்களை நடாத்துவார்கள் என்றும் அது கருதியிருக்கவில்லை.

இந்த ஒருவருடச்சமரில் 3000 படையினர் பலியாகியுள்ளனர். 7000த்தும் மேற்பட்ட படையினர் உடற்சேதத்திற்குள்ளாகியுள்ளனர். மொத்தம் பத்தாயிரம் படையினர் நடவடிக்கையிலிருந்து அகற்றப்பட்டுள்ளனர். இது, ஒரு டிவிசனுக்கும் மேற்பட்ட தொகையினர் என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை, இரண்டு டிவிசன் படையினரைப் பயன்படுத்தி பாதையை கைப்பற்றி விடலாம் என்று முன்னர் படைத்தலைமை கணித்திருந்தது. ஆயினும், இப்போது மூன்று டிவிசன்கள் பாதை பிடிப்புக்கு பயன்படுத்தப்படுகின்றன. 65 கி. மீ. நீளமான பாதையில் இதுவரை 35 கி. மீற்றரே கைப்பற்றப்பட்டுள்ளது. இந்த முயற்சிக்காக மட்டும் ஒரு டிவிசன் படையை [ஏறக்குறைய 10,000] இழந்துவிட்டது. இவற்றால் 'ஜயசிக்குறுய்' நடவடிக்கை ஆட்பற்றாக்குறையை எதிர்கொண்டது.

சிங்களப்படை சந்தித்துள்ள ஆட்பற்றாக்குறைக்கு படையை விட்டோடுவோரின் தொகை அதிகரிப்பும் ஒரு பிரதான காரணியாகும். சுமார் 18,000 பேர் படையை விட்டோடியுள்ளதாக, சிங்கள அரசு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. போர்முனையில் பெருநெருக்கடிகள் உருவாகும்போது படையை விட்டோடுவோரின் தொகை அதிகரிப்பது இயல்பு. 'ஜயசிக்குறுய்' சமர் இத்தகையதொரு நெருக்கடிக்குள் சிங்களத்தை தள்ளிவருகின்றது.

ஆ. க. வெ. சமர் மற்றும் 'மின்னல்' நடவடிக்கைக்கு எதிரான சமர்களைத் தொடர்ந்து வந்த 92ம், 93ம் போர் ஆண்டுகளில் புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகளில் ஏற்பட்ட ஏறுமுக வளர்ச்சியின் விளைவாக பெருமளவில் படையை விட்டோடும் முதலாவது படலம் ஆரம்பமாகியிருந்தது. இப்போது, 'ஜயசிக்குறுய்' நடவடிக்கைக்கு எதிரான சமரின் விளைவுகளாக் படையை விட்டோடும்இரண்டாவதுபடலமும் நடைபெறுகின்றது.

இழக்கப்படும் ஆட்தொகையை ஈடுசெய்யும் வகையில் படையில் இணைவோர் தொகை அதிகரிக்கவில்லை. சிங்களப்படை சந்திக்கும் பேரிழப்புகள் சிங்கள இளைஞர்களை வாக்கப்பிழக்கவைத்துள்ளன. 'ஜயசிக்குறுய்' நடவடிக்கை தோல்வியடைகின்றது என்று சிங்களமக்களும் எண்ணுகின்றனர். இதனால், தோற்கும் படையில் இணைய பின்நிற்கின்றனர்.

சிங்களத்தின் இராணுவ வரலாற்றைப் பொறுத்தளவில் இரண்டே இரண்டு காலகட்டத்தில் மட்டும் படையில் சேர சிங்கள இளைஞர்கள் முண்டியடித்தனர். ஒன்று, தேசிய பந்தோபஸ்து அமைச்சு என்ற ஒன்றை ஜே. ஆர். உருவாக்கி - அதன் தலைமைப்பதவியை லலித் அத்துலத்முதலியிடம் வழங்கிய காலப்பகுதியிலும் - இரண்டாவதாக, இரண்டாம் ஈழப்போர் ஆரம்பமான 90ம் ஆண்டின் இறுதிப்பகுதியிலும் அவை நிகழ்ந்திருந்தன.


'ஜயசிக்குறுய்' படையெடுப்பிற்கு எதிரான சமரில் புலிகள் வெளிப்படுத்தும் போர்முறையும் சிங்களப்படைக்கு மனச்சோர்வைக் கொடுத்து வருகின்றது. புலிகளை போரில் வெல்ல முடியாது என்ற மனப்பதிமத்தையும் அவர்களுக்கு கொடுத்துவருகின்றது.

கெரில்லா நடவடிக்கைகளிலும் - வலிந்த தாக்குதல் சண்டைகளிலும் - முறியடிப்புத்தாக்குதல்களிலும், புலிகள் திறமைகாட்டுபவர்கள் என்பது சிங்களப்படையினர்க்கும் தெரியும். ஆனால், நிலத்தை விட்டுக்கொடுக்காது நிலைகொண்டபடி - புலிகள் - தீவிரமானமுறையில் மரபுச்சண்டைகளை நடாத்துவது சிங்களப்படைகள் எதிர்பார்க்காத ஒன்று. நெருங்கி நின்று நடாத்தும் நேரடிச்சண்டை உபாயங்களை உபயோகித்து புலிகள் நடாத்தும் மரபுச்சமர் அபாரமாயுள்ளது. போர்க்கலங்களில் ஏற்றத்தாழ்வுகள் இருந்தாலும், மரபுச்சமரை புலிவீரர்கள் திறம்பட நடாத்துகின்றனர்.

புளியங்குளத்தில் ஆரம்பமான மறிப்புச் சண்டைகளுக்குப் பின்னர் புலிகள் நிலைகொண்ட பகுதிகளை சண்டையிட்டு கைப்பற்ற - இன்றுவரை - சிங்களப்படைகளால் இயலவில்லை. புளியங்குளம் பின்னர் கனகராயன்குளம் என புலிகள் தாமாகவே தமது நிலைகளைவிட்டுப் பின்வாங்கியபின்னரே அந்த இடங்களை படையினர் கைப்பற்றியுள்ளனர். புளியங்குளத்தில் நடந்த மறிப்புச்சண்டைகளில் புலிகளின் நிலைகளைக் கைப்பற்ற படையினரால் முடியவில்லை. நேரடியாக நிலைகளைக் கைப்பற்றுவதற்குப் பதிலாக, களத்தை அகல விஸ்தரித்து - அதன்மூலம் புலிகளை பின்னுக்கு இழுக்க முயன்றனர். புலிகளை பலவீனமாக்கும் என்று கருதி படையினர் செய்த அளவுக்கு மீறிய களவிஸ்தரிப்பால் இன்று படையினரே அவதிப்படுகின்றனர். ஆட்பற்றாக்குறையால் அவர்கள் அவதிப்பட இதுவுமொரு காரணியாக அமைந்துள்ளது.

'ஜயசிக்குறுய்' சமரில் சுமார் முப்பதாயிரம் காலாட்படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சிங்களத்துத் தரைப்படையில் இது மூன்றில் ஒரு பங்காகும். ஆயினும், சிங்களப்படையின் சண்டைப் படையணிகளில் இந்தத் தொகை அரைப்பங்கிற்கும் அதிகமாகும். அத்துடன், ஆயுத பலத்தைப் பொறுத்தவகையில் சிங்களத் தரைப்படையினரிடம் உள்ள ஆயுத வளங்களில் முக்கால் பங்கு 'ஜயசிக்குறுய்' நடவடிக்கைக்கு திருப்பி விடப்பட்டுள்ளது. படைத்தலைமையின் முழுக்கவனமும் 'ஜயசிக்குறுய்' களமுனைகளிலேயே உள்ளது. சிங்களப்படையிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த தளபதிகள் 'ஜயசிக்குறுய்' முனைகளிற்கே அனுப்பப்பட்டுள்ளனர். எனினும் சமரை வெற்றியை நோக்கி முன்னெடுத்துச் செல்ல படைத்தலைமையால் முடியவில்லை.

குறைந்த ஆட்தொகையையும் - குறைந்த ஆயுதவளங்களையும் வைத்திருந்தபடி அவற்றின் உச்சப்பயனைப்பெறும்வகையில், தலைவர் பிரபாகரன் செயற்படுத்தும் போர்த்திட்டங்களிலேயே புலிப்படைக்கு வெற்றிகள் கிடைக்கின்றன. O




## இரண்டாம் ஆண்டில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

"ஜயசிக்குறுய்" முதலாண்டுச் சமரால், சந்திரிகா அரசு, பாரிய அரசியல் நெருக்கடியையும் சந்தித்துள்ளது. தமிழரின் விடுதலைப் போரை ஒடுக்க அம்மையாரின் அரசு வரைந்த இராணுவ - அரசியல் திட்டங்களை புலிகள் இயக்கம் முறியடித்துவிட்டது என சிங்களத்தின் எதிர்கட்சிகள், அரசை குற்றம் சாட்டுகின்றன. எனினும், பலவந்த ஆட்சேர்ப்பு - விட்டோடிய படையினரை கைதுசெய்தாவது களமுனைக்கு அனுப்புவது - தேசியவளங்களை விற்றாவது போர்ச்செலவை ஈடுசெய்வது என்று, சிங்களதேசத்தையே போர்முயற்சிக்காக திசைதிருப்ப அரசு முயற்சிக்கின்றது. இவ்விதம், சிங்கள சமூகத்தை இராணுவமயப்படுத்தியாவது தமிழினத்துடனான போரை வென்றுவிடவேண்டும் என்று பேரினவாத அரசு துடிக்கின்றது.

இன்றைய நிலையில் மூன்று டிவிசன்களைக் கொண்ட முப்பதாயிரம் படையினர் 'ஜயசிக்குறுய்' களமுனையில் இருக்கின்றனர். இன்னும் சில மாதங்கள் கழித்ததும் ஜயசிக்குறுயின் ஆட்தேவையை அதிகரிக்கவேண்டிய நிர்ப்பந்தம் படைத்தலைமைக்கு எழும். அப்படி ஒரு நிலை ஏற்படும்போது 'வெற்றிஉறுதி' படைநடவடிக்கையின் இராணுவ விளைவுகளை சிங்களம் அனுபவிக்கத் தொடங்கும். O

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.eelamview.com